# மாலை தீப்பொறி

MALAE THEEPORI




நேர்காணல், தொடர்ச்சி


2024 ஜனவரி 16-31 தொகுதி 22 இதழ் 11 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200




## தோழர் மகேந்திரசிங் நினைவேந்தல்

## 16.1.2024 – ஜார்கண்ட்






## பில்கிஸ் பானோ வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நீதிக்கு சாதகமானது: பில்கிஸ் பானோவின் அயராத போராட்டத்திற்குத் தலை வணங்குகிறோம் பாலியல் குற்றவாளிகளைப் பாதுகாப்பதை பாஜக அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்!




பில்கிஸ் பானோ வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்புக்கு அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறது. உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு நீதிக்கு சாதகமானதும் பில்கிஸ் பானோவின் அயராத போராட்டத்தின் விளைவும் ஆகும். இந்த முடிவுக்குப் பிறகு, பாலியல் வல்லுறவாளர்களைப் பாதுகாப்பதை பாஜக அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த 2002ம் ஆண்டு, குஜராத் படுகொலையின் போது, கர்ப்பிணியாக இருந்த பில்கிஸ் பானோ கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டு, அவரது குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் அவரது கண் முன்னே படுகொலை செய்யப்பட்டதையும் நாம் அறிவோம். அவரது வழக்கில், நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, 11 குற்றவாளிகளுக்கு மகாராஷ்டிர உயர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. ஆனால் இந்த கொடிய குற்றவாளிகள் குஜராத் அரசால் ஆகஸ்ட் 15, 2022 அன்று விடுவிக்கப்பட்டனர். இப்போது, உச்ச நீதிமன்றம் இறுதியாக இந்த குற்றவாளிகளை மீண்டும் சிறைக்கு அனுப்ப முடிவு செய்துள்ளது.

மகாராஷ்டிரா நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதால், குற்றவாளிகளை விடுவிப்பது குறித்து முடிவெடுக்க குஜராத் அரசுக்கு உரிமை இல்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. சுப்ரீம் கோர்ட்டின் இந்த தீர்ப்பு குஜராத் பாஜக அரசு மற்றும் ஒன்றிய மோடி அரசு மீதான இடித்துரையாகவும் கொள்ளப்பட வேண்டும். உச்சநீதிமன்றத்தில் குஜராத் அரசாங்கம் வாதாடியபோது இந்த முடிவு ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் ஒப்புதலுடன்தான் எடுக்கப்பட்டதாக கூறியது.

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் உள்ளிட்ட பெண்கள் அமைப்புகள் இந்த பிரச்சினையில் தொடர்ந்து (பில்கிஸ் பானோவுக்கு நீதி கோரி) குரலெழுப்பி வந்தன.

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் பில்கிஸ் பானோவுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது; அவரது போராட்ட உணர்வுக்கு வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. அதோடு உச்சநீதிமன்றத்தில் பில்கீஸ் தரப்பை மிக வலுவாக எடுத்து வைத்த இந்திரா ஜெய்சிங், பிரிந்தா குரோவர் உள்ளிட்ட பெண் வழக்கறிஞர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

9 ஜனவரி 2024,

ரதி ராவ்,
தேசிய தலைவர்

மீனா திவாரி,
தேசிய பொதுச்செயலாளர்

**அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்** (AIPWA)

2024 ஜனவரி 16-31

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 11

உள்ளே

இந்திய மக்களாகிய நமக்கு வேண்டுகோள் 4
தோழர் திருமாவளவன் பேட்டி 3ம் பாகம் 8
ஏஐசிசியு தேசியத் தலைவர் உரை 13
மோடியின் தமிழ்நாடு வருகை 17

முதன்மை ஆசிரியர்
வீ.சங்கர்

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர்குழு
பாலசுந்தரம்
பழ.ஆசைத்தம்பி
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ.இரணியப்பன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை – 23

நிர்வாக அலுவலகம்
3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# சனாதன காவிப் பாசிசத்தின் கோர முகம்

இம்முறையும் இந்திய குடியரசுத் தலைவருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவிற்கு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அழைக்கப் படவில்லை. அதேபோல் வரும் ஜனவரி 22 அன்று நடைபெறவிருக்கும் அயோத்தி ராமர் கோயில் திறப்புவிழாவிற்கும் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு முக்கியஸ்தர் பட்டியலில் இல்லை. இந்தியாவில் உள்ள மக்களுக்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டதுபோல் அவருக்கும் வழங்கப்பட்டிருக்கலாம். புராண இதிகாசங்கள்படி இராமாயணத்தில் ராமராகவும் மகாபாரதத்தில் கிருஷ்ணனாகவும் அவதாரம் எடுத்தார் விஷ்ணு. அந்த மகாபாரதத்தில் முக்கியமான கதாபாத்திரம் திரௌபதி. அப்பெயரைத் தாங்கியவருக்கு, இந்தியாவின் முதல் குடிமகளுக்கு அவர் கணவரை இழந்தவர் என்பதாலும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் என்பதாலும் முக்கியத்துவம் அளிக்கப்பட வில்லை. சிலை பிரதிஷ்டை யின் போது கோயில் கருவறைக்குள் பிரதமர் மோடி, உபி ஆளுநர், முதல்வர் யோகி, ராம ஜென்ம பூமி அறக்கட்டளைத் தலைவர் நிருத்ய கோபால் தாஸ், ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத், அறக்கட்டளை யின் உறுப்பினர் அனில் மிஸ்ராவும் அவரது மனைவியும் அனுமதிக்கப் படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் பெயர் விருந்தினர்கள் பட்டியலில் கூட இல்லை. ராமர் சிலையை பிரதமர் மோடி பிரதிஷ்டை செய்வார் என்று இருந்ததற்கு, மனைவியுடன் வாழாதவர், பார்ப்பனர் அல்லாதவர் பிரதிஷ்டை செய்யக் கூடாது என்று எதிர்ப்பு கிளம்பியவுடன் இப்போது மோடி விருந்தினராகக் கலந்து கொள்வார் என்றும் அனில் மிஸ்ரா தம்பதியர் சடங்குகள் செய்வார் என்றும் அறிவித்துள்ளார்கள். மாட்டுச் சாணி மற்றும் வாசனைத் திரவியங்கள் கொண்டு 3610 கிலோ எடையுள்ள 3 அடி அகலமும் 108 அடி உயரமும் உள்ள 50 கி.மீ.சுற்றளவிற்கு மணம் பரப்பும் வாசனை ஊதுபத்தியை குஜராத்திலிருந்து கொண்டுவந்து கோயில் வளாகத்தில் கொளுத்தி வைத்துள்ளார்கள். இது ஒன்றரை மாதத்திற்கு எரிந்து கொண்டிருக்கு மாம். குழந்தை ராமருக்கான ஆடைகள் புனாவில் இருந்து பிரத்யேகமாகக் கொண்டு வரப்பட்டுள்ளதாம். இதற்கெல்லாம் எத்தனை கோடி ரூபாய் செலவு செய்துள்ளார்கள் என்று தெரியவில்லை. திறப்பு விழாவில் பங்கேற்போருக்கு ராமராஜ்ய மண்ணை நினைவுப் பரிசாகக் கொடுக்கப் போகிறார்களாம். ஒன்றிய அரசின் தூர்தர்ஷன் நிகழ்ச்சியை நேரடி ஒளிபரப்பு செய்கிறது. கொரோனா காலத்தில் லட்சக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் வேலையிழந்து, வருமானமிழந்து வீடு திரும்ப வழியில்லாமல் நூற்றுக்கணக்கான கி.மீ. நடந்தே சென்றபோதும் வழியில் செத்துமடிந்தபோதும், இலவச ரயில் பயணத்திற்கு அனுமதி மறுத்து, ஈவிரக்கமில்லாமல் கட்டணம் வசூலித்த மோடி அரசு இப்போது ராமர் கோயில் செல்ல இலவச ரயில் பயணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறதாம். அடுத்தவேளைக் கஞ்சிக்கு வழியில்லாமல் பட்டினியோடு கோடிக் கணக்கானோரும் அன்றாடங் காய்ச்சிகளாக பல கோடி பேரும் வாழ்ந்து கொண்டிருக்க, பல்லாயிரம் கோடி ரூபாயை தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக வீணாகக் கொளுத்திக் கொண்டிருக்கின்றனர் சங்கிக் கூட்டத்தினர். ஆனால், கடந்த 9 ஆண்டுகால தன்னுடைய ஆட்சியில் சுமார் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர் என்றும் ஏழைகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதே ஒரு நல்ல அரசின் கடமையாக இருக்க வேண்டும் என்றும் அவரின் திட்டங்கள் மூலம் நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்க்கை முறை மேம்பட்டுள்ளது என்று கொஞ்சம் கூட கூச்சமில்லாமல், பெருமிதம் பேசுகிறார் ஆந்திராவில் பிரதமர் மோடி. அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டதன் காரணமாக அங்கு வளர்ச்சித் திட்டங்கள்அமலாகி வருகின்றனவாம். மும்பையைச் சேர்ந்த ஒரு பிரபல நிறுவனத்தின் மூலம் 10,000 சதுர அடிகள் கொண்ட பங்களா குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன. ஒரு பங்களா சுமார் ரூ.15 கோடி என்றும் இதில் ஒன்றை அமிதாப்பச்சன் வாங்கப் போகிறாராம். அருகில் ஏழு நட்சத்திர அந்தஸ்தில் விடுதி கட்டப்பட உள்ளது என செய்திகள் சொல்கின்றன. இதுதான் ஏழை, நடுத்தர மக்களுக்கான வளர்ச்சித் திட்டமா? ராமர் கோயிலுக்கு நாடு முழுவதும் வீடுவீடாகச் சென்று அழைப்பிதழும் குங்குமமும் கொடுப்பது மட்டுமின்றி, விளக்கேற்ற வேண்டும் என்று மிரட்டி வருகின்றன சங்கிக் கூட்டம். அதுவும் சிறுபான்மை மக்களை மிரட்டி கட்டாயப்படுத்து கின்றனர். இதுதான் இவர்கள் வளர்க்கும் தெய்வ பக்தி ஆன்மீகம். வேலை, வருமானம், வாழ்க்கை என்பதைப் பற்றி சிந்திக்க விடாமல், மாட்டுச் சாணம், பசு மூத்திரம், ராமர் மண் என்று மக்களை மூடர்களாகவே வைக்க நினைக்கிறது கார்ப்பரேட் ஆதரவு இந்திய வகை சனாதன காவிப் பாசிசம். ❑

# இந்திய மக்களாகிய நமக்கு

## ஒரு பணிவான வேண்டுகோள்!


இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்த ஆண்டு நமது குடியரசு 75வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. புதிய ஆண்டு தொடங்கும் போது, தீர்மானகரமான 2024 தேர்தல்களுக்கு இன்னும் சில வாரங்களே மீதமிருப்பதை நாமறிவோம். பத்தாண்டுகளுக்கு முன்பு, அச்சே தின் அல்லது நல்ல நாட்களை நோக்கி அழைத்துச் செல்வேன், அனைத்து கருப்புப் பணத்தையும் திரும்பக் கொண்டு வருவேன், ஒவ்வொரு ஆண்டும் இரண்டு கோடி பேர்களுக்கு வேலைகள் உருவாக்குவேன் என்ற வாக்குறுதிகளோடு நரேந்திர மோடி அதிகாரத்திற்கு வந்தார். விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்காக்குவேன், 2022க்குள் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் நல்ல உறுதியான வீடுகள் கட்டித் தருவேன் என அவர் வாக்குறுதி அளித்ததால் பரவலான இந்தியர்கள் 2019இல் அவருக்கு இரண்டாவது வாய்ப்பையும் வழங்கினர். தற்போது 2024 தேர்தல்களுக்கு முன்னதாக மக்களுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு வாக்குறுதிகளும் அப்பட்டமான கேலிக்கூத்தாக மாறிவிட்ட போது, பாஜகவும் ஆர்எஸ்எஸ்ஸூம் அயோத்தியின் ராமர் கோவிலை தங்களது மிகப்பெரிய சாதனையாக காட்சிப்படுத்தி இராமரின் பெயரில் உங்களுடைய வாக்குகளை கேட்பதில் சுறுசுறுப்பாக செயல்படுவது மக்களுக்கு இழைக்கப்படும் குரூர அவமதிப்பாகும்.

பல தலைமுறைகளைத் தாண்டியும் கோடிக்கணக்கான இந்தியர்களின் இதயங்களைக் கவர்ந்ததாக இராமாயணம் திகழ்கிறது. உண்மை, நீதி, அனைவருக்குமான நன்மையின் புகழ்மிகு இந்திய உருவகமாக எப்போதும் ராமராஜ்யம் அழைக்கப்படுகிறது. பிரிவினைவாதம், வெறுப்பு, வன்முறை ஆகியவற்றை முன்வைக்கிற நவீன 21ஆம் நூற்றாண்டு ராமராஜ்யத்தின் நுழைவாயிலாக அயோத்தியின் ராமர் கோவில் இருக்கப்போகிறதா? பத்தாண்டு கால மோடி அரசாங்கமானது நம்மை சிக்கவைத்துள்ள அனைத்து மட்ட நெருக்கடியின் யதார்த்தத்தைக் காண்பதிலிருந்து, கண்கவர் காட்சியாகப் போகும் ராமர் கோவிலின் தொடக்க விழா நமது கண்களை குருடாக்காமல் இருக்கட்டும். உலகின் மிகவும் அதிக மக்கள் தொகை கொண்ட நாட்டிற்கு அரசியல் சாசன சட்டம் உறுதியளித்துள்ள நவீன மதச்சார்பற்ற ஜனநாயகத்தை கேலி செய்கிற, ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டிருக்கும் சமிக்ஞைகளை நாம் புறக்கணிக்காமல் இருக்க வேண்டும்.

டிசம்பர் 6, 1992 அன்று பாபர் மசூதியை இடித்த செயல்,

இந்திய அரசியல் சாசன சட்டத்தை அருவருக்கத்தக்க விதத்தில் மீறியதாகும் என 2019ஆம் ஆண்டின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கூறியது. இருந்த போதிலும் வழிபடும் இடத்தின் மீதான தாவா என்றென்றைக்குமாக முடிவுக்கு வந்துவிடும், அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் காலத்திற்கு அது இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கையில் அந்நிலத்தின் உரிமையை கோயிலின் அறக்கட்டளைக்கு அது வழங்கியது. ஆனால் சங்கிப் படையணி அத்தகைய மோதல்களை நாடு முழுவதும் விரிவாக்க விரும்பு கிறது. அனைத்து வழிபாட்டு இடங்களும் ஆகஸ்ட் 15, 1947 அன்று இருந்தது போலவே தொடர்ந்து நிலைத்திருக்கும் என உத்தரவாதம் வழங்கிய 1991 வழிபாட்டு இடங்கள் சட்டத்தை நீக்கவும் அது விரும்புகிறது. மேலும் இன்றைக்கு நடந்து கொண்டிருப்பது போல, அயோத்தியின் கோயிலை அரசின் முதன்மை செயல்திட்டமாக்கச் சொல்லி மோடி அரசாங்கத்திடம் உச்ச நீதிமன்றம் கேட்கவுமில்லை.

பொதுப் போக்குவரத்து, பொதுத்துறை நிறுவனங்களாகட்டும், அல்லது கல்வி, உடல்நலம் போன்ற அத்தியாவசிய பொது சேவைகளாக இருக்கட்டும், அடிப்படையில் பொதுவாக இருக்க வேண்டிய இவையனைத்தையும் ஒட்டு மொத்தமாகவோ அல்லது சிறிது சிறிதாகவோ மோடி அரசாங்கம் தனியார்மயமாக்குகிறது. மேலும் ஒரு குடிமகன்/குடிமகளின் முற்றிலும் தனிப்பட்ட விசயமான மதம், மத நம்பிக்கை அல்லது உணர்வை அரசாங்கம் ஒட்டுமொத்தமாக கையில் எடுத்துக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தின் பிரதம அமைச்சர், தானொரு மதகுரு போல நடந்து கொள்கிறார்; மக்களுக்கும் அவர்களுடைய நாடாளுமன்றத்திற்கும் பதில் சொல்ல வேண்டியவராக இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட தெய்வீகப் பிரதிநிதியாக தன்னை முன்னிறுத்துகிறார். இது ஜனவரி 26, 1950 இல் சுதந்திர இந்தியா தனக்குத் தானே பிரகடனப்படுத்திக்கொண்ட நவீன குடியரசின் அடிப்படை கருத்தையே ஒட்டுமொத்தமாக மறுக்கும் செயலாகும்.

பல்கலைக்கழகங்களிலிருந்து ரயில் நிலையங்கள் வரை எல்லா இடங்களிலும் மக்களின் வரிப்பணத்தை செலவழித்து மோடியுடன் செல்பி எடுக்க இடங்கள் அமைக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அரசாங்கத்தின் பரப்புரை மட்டுமே நிரந்தர அடிப்படையிலானது. மற்றவை அனைத்தும் ஒப்பந்த அடிப்படையிலேயே செயல் படுத்தப்படுகின்றன. நிரந்தர வேலைகள் என்ற கருத்தே இந்திய இளைஞர்களிடமிருந்து பறிக்கப் பட்டு விட்டது. இராணுவத்திற்கு தெரியாமலேயே எவ்வாறு அக்னி வீரர்கள் திட்டம் திணிக்கப்பட்டது என இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதி இப்போது நமக்குச் சொல்கிறார். மிகச் சரியாக இதே வழியில்தான் 500 மற்றும் 1,000 ரூபாய் நோட்டு களும் அவற்றை தொடர்ந்து, பணமதிப்பகற்ற லுக்குப் பிறகு வெளியிடப்பட்ட 2,000 ரூபாய் நோட்டுகளும் கூட, இந்திய வங்கியாளர்கள், பொருளாதார வல்லுநர்களிடம் கூட எவ்வித ஆலோசனையும் கேட்கப்படாமலேயே தடை செய்யப்பட்டன.

கடந்த அனைத்து ஆண்டுகளிலும் இந்தியாவிற்குள் வெளிநாட்டினர் சட்ட விரோதமாக புலம் பெயர்வதற்கு முயற்சிப்பதாக அரசாங்கம் நமக்குச் சொன்னது. தற்போது இந்தியர்கள் சட்ட விரோதமாக குடியேறியவர்களாக அடையாளம் காணப்பட்டு வெளிநாடுகளில் இருந்து திரும்ப அனுப்பி வைக்கப் படுவது குறித்து அடிக்கடி நம்மால் கேட்க முடிகிறது. சில நாட்களுக்கு முன்னதாக, முழுவதும் இந்திய பயணிகளை, அதில் பெரும்பாலானோர் குஜராத்தைச் சேர்ந்தவர்கள், கொண்ட ஒரு விமானம் பிரான்சில் தரையிறங்கியது; அந்த பயணிகள் அனைவரும் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பி வைக்கப் பட்டனர். பணக்கார இந்தியர்கள், அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, மேலும் பல மேற்கத்திய நாடுகளின் குடிமக்களாவதற்காக இந்தியக் குடியுரிமையை விட்டு விடுகின்றனர். பல்வேறு இந்திய முதலாளிகள் இந்திய வங்கிகளில் பெருமளவு கடனை வாங்கி விட்டு நாட்டை விட்டே ஓடி விட்டனர். அதேவேளையில், இந்த அரசாங்கம் இந்தியத் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அதிகரித்த அளவில் ஏற்றுமதி செய்கிற போது, பணக்காரர்களின் கடனை தள்ளுபடி செய்து கொண்டேயிருக்கிறது. இஸ்ரேலுக்கு சென்று தங்கள் உயிரைப் பணயம் வைத்து பணி செய்வதற்கு இந்தியத் தொழிலாளர்களை அனுப்ப பாஜக அரசாங்கங்கள் ஆவலுடன் இருக்கின்றன.

பெரும்பிரிவு இந்தியக் குடிமக்களின் வாழ்வு அதிகரித்த அளவில் பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது. முஸ்லிம்கள் கும்பல் கொலைகளையும் புல்டோசர்களையும் எதிர்கொள்ளும் நிகழ்வுகள் வழக்கமானதாக மாறியுள்ளது. நகரங்களிலிருந்து ஏழைகள் பெரும் எண்ணிக்கையில் வெளியேற்றப் படுவதை எதிர்கொள்கின்றனர். தலித்துகள், பழங்

குடியினர் மீது கொடுமைகள் நிகழ்த்தும் குற்ற நிகழ்வுகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்த போதும் கூட, அத்தகைய கொடுமைகள் புரியும் குற்றவாளிகள் ஒருபோதும் தண்டிக்கப்படுவதே யில்லை. பெண்களுக்கு எதிரான வன்முறையை மேற்கொள்ளும் குற்றவாளிகள், பாஜகவின் தகவல் தொழில்நுட்ப பிரிவுகள் முதல் மாநில சட்டமன்றங் கள், நாடாளுமன்றம் வரை அனைத்து மட்டங் களிலும் பதவிகள் வழங்கப்பட்டு பாதுகாக்கப்படு கிறார்கள்.

சமூக, பொருளாதார, அரசியல் நீதியை அரசியல் சாசன சட்டம் நமக்கு வாக்களித்துள்ளது. இருப் பினும் இன்றைக்கு நீதியை கோரும் மக்கள் பொய் வழக்குகள் போடப்பட்டு சிறையில் அடைக்கப் படுகின்றனர். விவசாயிகளின் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்க, வேளாண் சட்டங்களையும் தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் பயன் படுத்திய பிறகு, மோடி அரசாங்கம் தற்போது இந்தியாவை மெய்யான காவல்துறையின் ஆட்சியாக மாற்ற, குற்றவியல் சட்டங்களின் ஒட்டுமொத்த தொகுதியையும் மாற்றுகிறது. அரசாங்கத்திற்கு எதிரான ஒவ்வொரு எதிர் கருத்தும் போராட்டமும் தற்போது பயங்கரவாத நடவடிக்கையாக எடுத்துக் கொள்ளப்படுவதற்கு காரணமாக்கப்படுகிறது. மேலும் கொடூர பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் கீழ் கடுமையான ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப் படுகிறது.

இவையெல்லாம் இந்தியா ஒரு வளர்ந்த நாடாக, வலுவான ஜனநாயகமாக மாறுவதன் அடையாளங் களல்ல. இவை ஒரு நிரந்தர, நிறுவனமயமாக்கப் பட்ட பயங்கரத்தின் ஆட்சி, ஒடுக்குமுறை என்ற பாசிசத்தின் அடையாளங்களாகும். நமது அரசியல் சாசன சட்டத்தின் முகவுரையை நாம் வாசித்து விட்டு, தனிப்பட்ட குடிமக்களாக நமது சொந்த வாழ் நிலைமைகளையும், ஒரு குடியரசாக கூட்டாகவும் நோக்கினால் எவ்வாறு நமது நாடு அரசியல் சாசன சட்ட இலக்குகளுக்கும் கடமைகளுக்கும் எதிர்த் திசையில் ஒவ்வொரு நாளும் தள்ளப்பட்டு கொண்டிருக்கிறது என்பதை நம்மால் காணமுடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்ப பதவி நீக்கம் செய்யப்படுகிற, இடைநீக்கம் செய்யப்படுகிற, எதிர்கட்சிகளற்ற நாடாளுமன்றம் என்ற நிலைமைக்கு மோடி அரசாங்கத்தின் பத்து ஆண்டுகள் ஏற்கனவே நம்மை தள்ளி விட்டுள்ளது. அரசியல் சாசன சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் ஒன்றியம் என்பதற்கு மாறாக, இந்தியா நீட்டிக்கப்பட்ட டெல்லி அரசவையாக அதிகரித்த அளவில் காணப்படுகிறது. இங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களுக்கு மேலாக ஆளுநர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்; இங்கே ஜம்மு காஷ்மீர் அதன் அரசியல் சாசன சட்ட உரிமைகள் அகற்றப்பட்டு, ஒன்றியத்தின் இரு பகுதிகளாக (யூனியன் பிரதேசங் கள்) பிரிக்கப்பட்டுள்ளது; இங்கே மணிப்பூர் பல மாதங்களாக பற்றி எரிந்து கொண்டி ருக்கிறது; பிரதமர் ஒரு நாளைக்கு அங்கு சென்று பார்ப்பது இருக்கட்டும், நாடாளுமன்றத்தில் அந்த மாநிலத் தைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசத் தயாரில்லையே பிரதமர்.

காஸாவில் பாலஸ்தீனிய குழந்தைகளை ஒவ்வொரு நாளும் இஸ்ரேல் படுகொலை செய்வது குறித்து ஒட்டுமொத்த உலகமும் கவலைப்படுகிறது. மனிதநேயத்தின் மீதான இந்தப் போரில், உலகின் மிகப்பெரிய ஏகாதிபத்திய சக்தியான அமெரிக்கா, இந்தியாவின் முன்னாள் காலனிய ஆட்சியாளரான பிரிட்டன் ஆகியோரின் முழுமையான ஆதரவு இஸ்ரேலுக்கு உள்ளது. காலனிய ஆட்சியின் போது, ஜாலியன் வாலாபாக் போன்ற அநேக படுகொலை களை அனுபவித்த ஒரு நாடாக, காஸாவில் உடனடியான போர் நிறுத்தத்தை கோருவது மட்டுமல்லாமல், இஸ்ரேலின் போர் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக, கடும் சோதனை களை சந்திக்கும் பாலஸ்தீனியர் களுக்கு ஆதரவாக இந்தியா நிற்கவேண்டும். இனவாதத்திற்கும் காலனியவாதத்திற்கும் எதிராக வரலாற்று சிறப்பு மிக்க போராட்டத்தை காந்தி தொடங்கிய நாடான, 20 ஆம் நூற்றாண்டு முடியும் தருவாயில் நிறவெறியின் கொடிய ஆட்சியை இறுதியில் தோற்கடித்த நாடான, தென்னாப்பிரிக்கா, இன்று சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரு கிறது. ஆனால் மோடி அரசாங்கத்தின் கீழ் அமெரிக்க இஸ்ரேல் போர் எந்திரத்தோடு நெருக்கமாக இணைந்து, நீதி, சுதந்திரம், அமைதியின் உலக ளாவிய குரலிலிருந்து இந்தியா தனிமைப்பட்டு நிற்கிறது.

பேரழிவுமிக்க மோடி அரசாட்சியின் மற்றுமொரு ஐந்து ஆண்டுகளை இந்தியாவால் தாங்கிக் கொள்ளவே முடியாது. சுதந்திர இந்தியாவில் பழுப்பு கொள்ளையர்கள் பகத்சிங் நம்மை எச்சரித்திருந்தார். மதமும் அரசாட்சியும் இணையும் போது அரசியலில்

வழிபாடு (பக்தி) நிச்சயமான நிகழ்வாகும்; அது சர்வாதிகாரத்திற்குத்தான் வழிவகுக்கும் என அம்பேத்கர் நம்மிடம் கூறியிருந்தார். நமது குடியரசின் 74 வது ஆண்டுவிழாவை அனுசரிக்கும் போது இந்த எச்சரிக் கைகள் எப்போதையும் விட உண்மையானதாக ஒலிக்கின்றன.

அதனால் இந்தக் குடியரசை மீட்டெடுக்க நாம் உறுதி பூண வேண்டிய நேரம் இதுவாகும். இந்தியாவை உண்மையாகவே உருவாக்கியவர் களான தொழிலாளர்களும் விவசாயிகளும் அவர்களுக்கு கிடைக்க வேண்டியதை பெற்றாக வேண்டும். இளைய இந்தியாவிற்கு பாதுகாப்பான எதிர்காலம் கண்டிப்பாக இருக்க வேண்டும். இந்திய பெண்களுக்கு, ஒடுக்கப்பட்டவர்களுக்கு, வறுமை யில் வாடும் பரந்த மக்களுக்கு முழுமையான சுதந்திரம், நீதி, கவுரவம் கிடைக்க வேண்டும். மத, மொழி சிறுபான்மையினர் வளம் பெறுவதற்கு சம உரிமைகளும் வாய்ப்புகளும் கண்டிப்பாக கிடைக்க வேண்டும். சீரான ஒற்றைத்தன்மை என்ற பெயரில் இந்தியாவின் உயர்ந்த பன்மைத்துவத்தை ஒழித்துக் கட்ட ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை யுடன், இறையாண்மைமிக்க ஜனநாயக குடியரசாக இந்தியாவை பிரகடனப்படுத்திய, நமது விடுதலைப் போராட்ட இயக்கத்திலிருந்து நாம் பெற்ற அரசியல் சாசன சட்டம் இப்போதும் நம்மிடம் உள்ளது. அம்பேத்கரின் தலைமையில் எழுதப்பட்ட இந்த அரசியல் சாசன சட்டமானது, காலனிய அரசியல் சாசன சட்டம் என மோடியின் அரசாட்சியில் உள்ள பலரும் வெளிப்படையாக விளக்கத் தொடங்கி விட்டனர். சட்டங்களை மாற்றி எழுதுவது போன்று, இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தை அதிபரின் சர்வாதிகாரமாக மாற்றிவிடும் எண்ணத்துடன் புதிய அரசியல் சாசன சட்டம் வேண்டும் என சங்கிப் படையணியிலிருந்தும் மோடி முகாமிலிருந்தும் உரத்த கூச்சல் வெளி வருகிறது. இந்தியாவின் ஒடுக்கப்பட்ட மக்களையும் பெண்களையும் அடிமைப்படுத்துகிற பழங்கால சட்டமான மனுஸ் மிருதியை நவீன இந்தியாவின் அரசியல் சாசன சட்டமாக கொண்டுவர ஆர்எஸ்எஸ் திட்டமிடுகிறது என்பதை நாம் கண்டிப்பாக மறந்து விடக்கூடாது.

எனவே நம்முடைய ஒவ்வொரு வாக்கும், 2024 மக்களவைத் தேர்தலில் பேரழிவுமிக்க மோடி அரசாட்சி தோற்கடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். பாசிச மோடி அரசாங்கத்திற்கு எதிராக மிகப் பரந்த எதிர்க்கட்சி ஒற்றுமைக்காக இகக (மாலெ) தொடக்கத்திலிருந்து பாடுபட்டி ருக்கிறது. இந்தியா கூட்டணியின் ஒரு அங்கமாக வர இருக்கிற தேர்தல்களில் அனேகமாக வெகுசில தொகுதிகளில் மட்டுமே நாங்கள் போட்டியிடுவோம். ஆனால் நமது இந்தியா கூட்டணியின் வெற்றிக்காக அனைத்து இடங்களிலும் நாங்கள் வேலை செய்வோம். கார்ப்பரேட் கொள்ளை, மத வெறுப்புணர்வு, சமூக அடிமைத்தன சக்திகளை சுதந்திரமும் நீதியும் வெல்லட்டும்.

பிரிட்டிஷ் காலனிய ஆட்சி முதல் ஜமீன்தாரி முறை, பார்ப்பனிய நிலப்பிரபுத்துவ மேலாதிக்கம் வரை அநீதி, ஒடுக்குமுறையின் அனைத்து சக்திகளையும் வரலாற்று ரீதியாக வெற்றிகொண்ட இந்திய மக்கள், பாசிசத்திற்கு எதிராக ஜனநாயகத் திற்கான இந்தப் போராட்டத்திலும் வெற்றியாளர் களாக மேலெழ வேண்டும். மிகச் சமீபத்தில் வெற்றிகரமான விவசாயிகளின் இயக்கம் மக்களின் ஒன்றுபட்ட, தீர்மானகரமான போராட்டத்தின் சக்தியை நமக்கு காண்பித்தது. ஒற்றுமையுடன் நிச்சயமாக நம்மால் இந்த சங்கிப் பாசிஸ்டுகளை வெற்றி கொள்ள முடியும்.

போராடுவோம்!

வெற்றி பெறுவோம்!

**மத்தியக் கமிட்டி,**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**(மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) விடுதலை**


**உழைக்கும் மக்களின் வாழ்க்கையைக் காத்திட பேரழிவுமிக்க மோடி அரசை 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தூக்கி எறிவோம்!**

**2024 பிப்ரவரி 16**

**தொழிற்சாலைகள் மற்றும் கிராமப்புறத் தொழிலாளர்களின் அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம்!**

**(நவம்பர் 7, 2023 அன்று மாலெ தீப்பொறி ஆசிரியர் ஜி.ரமேஷ் உள்ளிட்ட குழுவிற்கு விடுதலை சிறுத்தை கட்சிகளின் தலைவர் தொல். திருமாவளவன் தாய்மண் அலுவலகத்தில் அளித்த நேர்காணலின் நிறைவுப்பகுதி. நேர்காணலை முழுமையாக வாசிக்க www.tamilnadu.cpiml.net சொடுக்கவும். கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.)**

# இந்தியா கூட்டணியை வலுப்படுத்தினால் பாஜக வை நிச்சயமாக வீழ்த்த முடியும்



**பிப்ரவரியில் (2023) மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு பாட்னாவில் நடந்தது. நீங்களும் அதில் கலந்து கொண்டீர்கள். அந்த மாநாட்டில்தான் எதிர்க் கட்சிகளின் கூட்டணிக்கான முதல் மணி அடிக்கப்பட்டது. அதற்குப்பிறகு இந்தியா கூட்டணி உருவாகி இருக்கிறது. இந்தியா கூட்டணியை வலுப்படுத்துவதற்கான உங்க ளுடைய ஆலோசனைகள்?**

கடந்த 10 ஆண்டுகளாகவே நாங்கள் இதுபற்றி பேசி வருகிறோம். காங்கிரஸ், பிஜேபியினுடைய அரசியல் எதிராளியாக இருக்கிற நிலையில், காங்கிரசுக்கு தேசிய அளவில் கணிசமான வாக்கு வங்கி உள்ள நிலமையில், காங்கிரசோடு எதிர்க் கட்சிகளின் ஒருங்கிணைப்பு ஏற்படும் போதுதான் பிஜேபியை வீழ்த்த முடியும் என்கிற புரிதல் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு இருக்கிறது. விடுதலை சிறுத்தைகளுக்கும் காங்கிரசுக்கும் முரண்கள் உண்டு. 2019 தேர்தலின் போது, சிபி ஐ-ன் அப்போதைய பொதுச்செயலாளர் சுதாகர் ரெட்டி, சீதாராம் யெச்சூரி உள்ளிட்ட இடதுசாரி தலைவர் களை சந்தித்து இந்தக் கருத்தை வலியுறுத்தினோம். காங்கிரஸையும் பிஜேபியும் சமதூரத்தில் வைத்துப் பார்க்கவேண்டாம். இந்த இரண்டு கட்சிகளும் ஒரே தன்மை உள்ளதாக இருந்தாலும் கூட கருத்தியல் ரீதியாக பாஜக மிகவும் ஆபத்தானது என்பதை எடுத்துக் கூறினோம். பிஜேபியை வளரவிடாமல் தடுப்பதற்கு நீங்களெல்லாம் ஒரு அணியில் இருக்க வேண்டுமென்று பேசினோம். எழுத்துபூர்வமாகவே கொடுத்திருக்கிறோம். டிஆர்எஸ்-பிஆர்எஸ் ஆக மாறிய செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்கிற வாய்ப்பு எனக்கு கிடைத்தது. பிஜேபி எதிர்ப்பு நிலையில் இருக்க வேண்டும். காங்கிரஸ் ஆதரவு நிலை எடுக்க வேண்டும் என்று அந்த கூட்டத்தில் எடுத்துரைத்தேன்.

திமுக தலைமையிடம் தனிப்பட்ட முறையில் பேசும்போதும் பொதுக்கூட்டங்களில் பேசும் போதும் இந்த கருத்தை வலியுறுத்தியிருக்கிறோம். நீங்கள் முன் முயற்சி எடுங்கள். தேசிய அளவில் எதிர்க்கட்சிகளை ஒருங்கிணையுங்கள். ரொம்ப ஆபத்தான நிலையில் இந்தியாவும் இந்திய அரசமைப்புச் சட்டமும் உள்ளன. பிஜேபியை வீழ்த்துவதற்கு எதிர்க்கட்சிகள் வாக்குகள் சிதறாமல் இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வந்துள்ளோம். ஒவ்வொருவருக்கும் இது மாதிரியான வேட்கை இருந்ததனால்தான் நாமெல்லாம் ஒன்றாக சேர்ந்து இருக்கிறோம். 28 கட்சிகள் ஒன்று

சேர்ந்துள்ளன. இதே கருத்து, சிபிஐஎம்எல்க்கும் இருந்ததனால்தான் பாட்னா மாநாட்டில் நிதிஷ்குமார், தேஜேஸ்வி இன்னும் பலரும் வந்து பேசினார்கள்.

காங்கிரஸ் ஓரளவுக்கு புரிஞ்சுகிட்டு, விட்டுக் கொடுத்து பிற எதிர்கட்சிகளை ஒருங்கிணைத்து ஒத்துழைப்பை நல்குகிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். மம்தா பானர்ஜி வரமாட்டாங்க, நிதிஷ்குமார் வரமாட்டார், கெஜிரிவால் வரமாட்டார். உத்தவ் தாக்கரே வரமாட்டார் என்றெல்லாம் பேசப்பட்ட நிலையில், இன்றைக்கு ஒரே அணிக்குள் எல்லோரையும் கொண்டு வந்து, இந்தியா கூட்டணி என்ற ஒரு வலுவான எதிர்க்கட்சிகளின் கூட்டணி உருவாகி யிருக்கிறது. நாம் எல்லோருமே முயற்சி எடுத்திருந் தாலும் காங்கிரஸ் பரந்த பார்வையோடு அணுகியதும் எல்லாரையும் அரவணைத்துச் சென்றதும்தான் இந்த அணி உருவாவதற்கு முக்கியமான காரணம். இந்த அணி சிதறாமல் இருக்க வேண்டுமென்றால், இன்னும் வலுப்பெற வேண்டுமானால், காங்கிரஸ் இன்னும் வளைந்து கொடுத்து, தளர்வோடு இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, முரண்கள் இருக்கக் கூடிய மேற்குவங்கம், கேரளா, பஞ்சாப், தில்லி, பிஹார், மாநிலங்களில் அங்கு உள்ள கட்சிகளோடு காங்கிரஸ் மிகமிக இணக்கமாகப் போகவேண்டிய தேவை உள்ளது. தெலுங்கானா, ஆந்திரா மாநிலங் களையும் இந்த அணிக்குள்ளே கொண்டு வரவேண்டும். ஒய்எஸ்ஆர்சிபி, பிஆர்எஸ் இரண்டு கட்சிகளையும் இந்த அணிக்குள் கொண்டு வருவதற்கு ஒரு சிறப்பு முயற்சி எடுக்க வேண்டும். ராகுல் காந்தி ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மாநில கட்சித் தலைவர்களை நேரில் சென்று சந்தித்து வேண்டுகோளை வைக்க வேண்டும். ராகுல் காந்தி, மம்தாவை பார்க்கிறார், சந்திரசேகர்ராவை பார்க்கிறார் என்றால் அது ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இதில் எந்தவிதமான பொய்யான பெருமையோ, அகந்தையோ கூடாது. காங்கிரஸ் நூறு ஆண்டுகால பெரிய கட்சிதான்; நீண்ட காலமாக இந்தியாவை ஆண்ட கட்சிதான். ஆனால் இன்றைக்கு இருக்கிற நெருக்கடியில் காங்கிரஸ் எந்த அளவுக்கு விட்டுக் கொடுத்து போகிறதோ; நெகிழ்வான அணுகு முறையை கையாள்கிறதோ அந்த அளவுக்கு இந்தியா கூட்டணி வலுப்பெறும். பிஜேபி வீழ்த்தப்படும்.

இப்போது நடைபெற இருக்கிற ஐந்து மாநில தேர்தல்களில் அந்தந்த மாநிலத் தலைவர்களின் பேச்சு வார்த்தையில் நெகிழ்வுத்தன்மை காணப் படவில்லை. அகிலேஷ் யாதவும் சரி மற்றவர்களும் சரி வெளிப்படையாக தங்களுடைய அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளனர். நிதிஷ்குமார் அவர்களே கூட அதிருப்தியை வெளிப்படுத்தி இருக்கிறார். இது எந்த வகையிலும் நல்ல அறிகுறி இல்லை. அதனால், மற்ற கட்சிகளுக்கு விடுக்கிற வேண்டுகோள் என்பதைவிட காங்கிரஸ் கட்சிக்கு நான் வைக்கிற வேண்டுகோள், ஐந்து மாநில தேர்தல்கள் மட்டுமல்ல அடுத்து வரும் மக்களவை தேர்தல்களிலும் கூட்டணி கட்சிகளோடு நல்ல இணக்கமான உறவுகளை தொடர முன்வர வேண்டும். ராகுல் காந்தி தொலை நோக்குப் பார்வை உடையவராக இருக்கிறார். முற்போக்கான சிந்தனை கொண்டவராக இருக்கிறார். சாதாரண மக்களிடம் நெருங்கி பழகுவது, அவர் களோடு இருந்து வேலை செய்வது, தன்னுடைய பாதுகாப்பைப் பற்றிகூட கவலைப்படாமல், தனது பாட்டியை படுகொலை செய்யப்பட்டதையும் கருத்தில் கொள்ளாமல், வெறுப்பை வெளிப்படுத் தாமல், பொற்கோவிலில் உட்கார்ந்து சேவைசெய்யும் அந்த முயற்சி பாராட்டுக்குரியது. இது வெறும் நடிப்பு, என்று கடந்து சென்றுவிட முடியாது. உண்மையில் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. அவர் தன்னுடைய பாதுகாப்பையும் தாண்டி, 4000 கிலோமீட்டர் ஒரு பாரத ஒற்றுமை யாத்திரையை நடத்திக்காட்டி இருப்பது பெரிய சாதனை. இந்தியாவை பாதுகாப்போம் என்கிற அடிப்படையில்தான் அந்தப்பயணம் அமைந் திருந்தது. அடிப்படையில் பார்க்கும்போது ராகுல் காந்தி, இந்த தேசத்தைப் பாதுகாக்க வேண்டும், நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும், அரச மைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும்; இந்த வலதுசாரி ஆட்சி வீழ்த்தப்பட வேண்டும்; சனாதன அரசியல் வீழ்த்தப்பட வேண்டும் என்பதில் 100 விழுக்காடு பொருந்திப் போகிறார். மாநிலங்களில் இருக்கக்கூடிய காங்கிரஸ் தலைவர்கள், ராகுல் காந்தியின் இந்த பார்வைக்கு ஏற்ப, அவருடைய அணுகுமுறைகளுக்கு ஏற்ப ஒத்துழைத்தால் இந்தியா கூட்டணி இன்னும் வலுப்பெறும்; கட்டாயமாக பிஜேபி வீழ்த்தப்படும்.

முன்பு சொன்னதுபோன்ற, இந்தியா கூட்டணிக் குள் இருக்கும் பிரச்சனைகளை சரி செய்வதில், கூட்டணியை வலுப்படுத்துவதில், அதை பாதுகாப் பதில், திமுகவுக்கு ஒரு முக்கிய பங்கு இருக்கிறது. திமுக உடனடியாகத் தலையிட வேண்டும் என்பது தான் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கருத்து.

ஆனால், திமுக இதை சரிசெய்ய வேண்டுமென்பதை விடவும் காங்கிரஸ் கட்சி சரிசெய்ய வேண்டும். ராகுல் காந்தி சரிசெய்ய வேண்டுமென்பதுதான் மிக முக்கியமானது. இந்தியா கூட்டணியைப் பாதுகாப்பதில், அதை வலுப்படுத்துவதில் ராகுல் காந்தி கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

## வட இந்தியா போல் பிஜேபி இங்கு வலுப்பெற முடியுமா? தமிழ்நாட்டில் அதன் முயற்சிக்கு எந்த அளவு பலன் இருக்கும்?

தமிழ்நாட்டில் திமுக, அதிமுக கட்சிகள் இடையேதான் மாநில அரசியல் சுழன்று கொண்டு இருக்கிறது. கலைஞர் எம்ஜிஆர், கலைஞர், ஜெயலலிதா என்று அரசியல் இருந்து வந்தது. திராவிட கட்சிகளே ஆளுங்கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் இருந்ததால் தேசிய கட்சிகளுக்கு இங்கு வேலை இல்லை என்றாகிவிட்டது. காங்கிரஸ் மீண்டும் தமிழ்நாட்டில் வெற்றிவாகை சூட முடியாததற்கான காரணம் அண்ணா திமுக தான். அதிமுக என்ற ஒன்று உருவாகாமல் இருந்திருந்தால் திமுக மற்றும் காங்கிரஸ் மாறி மாறி ஆட்சிக்கு வந்திருக்க முடியும். திமுகவின் வலிமைக்கு எதிராக அதிமுகவும் வலிமையாக இருந்தது. அதிமுக அல்லது திமுக இந்த இரண்டு கட்சிகளில் எந்த கட்சி பலவீனப்பட்டாலும் அது பிஜேபிக்கு லாபமாகவே அமையும். கலைஞர் இல்லை, ஜெயலலிதா இல்லை என்கிற சூழ்நிலையில், இன்று திமுக ஆளும்கட்சியாக இருக்கிறது. அறுபதுக்கு மேற்பட்ட இடங்களில் அதிமுக வெற்றி பெற்றிருந்தாலும் கூட, தான்தான் எதிர்க்கட்சி என்பதை அதிமுகவால் நிறுவமுடியவில்லை. ஜெயலலிதா அளவிற்கு வலுவான அரசியல் தலைமை இல்லை. திமுகவை விமர்சிப்பதற்கும் களத்தில் எதிர்கொள்வதற்கும் எதிர்க்கட்சி பாத்திரம் ஆற்றுவதற்கும் அதிமுகவிடம் செயல் திட்டம் இல்லை.

இந்த ஓட்டையைப் பயன்படுத்தி பிஜேபி முன்னுக்கு வரப்பார்க்கிறது. இருப்பது போல் ஒரு தோற்றத்தை உருவாக்க முயற்சிக்கிறார்கள். பிஜேபி நிகழ்ச்சிகளுக்கு யார் போகிறார்கள் என்றால், அந்த கூட்டணியில் இருக்கக்கூடிய அதிமுக, பாமக நபர்களும் அந்த கூட்டணியில் இருக்கக்கூடிய பிற கட்சிகளில் உள்ள அதிதீவிர இந்துத்துவ ஈடுபாடு உடைய தொண்டர்களும்தான் போகிறார்கள். அண்ணாமலை பயணத்தில் கூட இதைப்பார்க்க முடிகிறது. கூட்டணி கட்சிகளை வலுவிழக்கச் செய்வது, விழுங்குவது பிஜேபி–ஆர்எஸ்எஸ் செயல்திட்டத்தில் ஒன்று. தமிழ்நாட்டில் பிஜேபி வளர்ச்சி என்பது பாமக, அதிமுகவின் வீழ்ச்சி. ஆனால், இது பெரிய அளவிலே பலனளிக்குமென்று தோன்றவில்லை. ஏனென்றால் அண்ணா திமுக வாக்கு வங்கி இன்னும் சிதறவில்லை. ஜெயலலிதா மறைந்து இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அந்த வாக்கு வங்கி, திமுகவுக்கோ வேறு கட்சிகளுக்கோ போய்விடவில்லை. அதிமுக என்பதே, திமுக எதிர்ப்பு வாக்கு வங்கிதானே. அந்த வாக்கு வங்கி கட்டுக்குலையாமல் இருக்கிறது. அதிமுகவும் பாமகவும் தங்கள் தொண்டர்களுடன் உரிய செயல் திட்டங்களோடு களத்தில் இறங்கினால், பிஜேபி பெரிய சக்தியாக காலூன்ற முடியாது. இன்று பிஜேபியை ஒரு சக்தியாக தோற்றம்பெற வைப்பதே அதிமுக, பாமகவின் பலவீனம்தான்.

## அதிமுக–பாஜக பிரிவு நீடிக்கும் என்று கருதுகிறீர்களா?

எனக்கு இன்னும் அந்த நம்பிக்கை வரவில்லை. பிஜேபி–அதிமுக பிரிவு நீடிக்குமென்று நான் கருதவில்லை. அதிமுக தனியாக நின்று தேர்தலை சந்திப்பார்கள் என்றும் தோன்றவில்லை. கடைசி நேரத்தில், மோடி, அமித்ஷா எடப்பாடியை அழைத்துப் பேசினால் எல்லாம் மாறிவிடக்கூடும். இது அவர்களின் செயல்தந்திரமாகக்கூட இருக்கலாம். பிஜேபி–அதிமுவுக்கும் இடையிலான பிரச்சனை என்பதாக தெரியவில்லை. அண்ணாமலைக்கும் எடப்பாடிக்கும் இடையிலான பிரச்சனையாகக்கூட இருக்கலாமெனத் தோன்றுகிறது.

## ஆளுநர் மாளிகை அரசியல் பற்றி?

பிஜேபி–ஆர்எஸ்எஸ்சின் முழு நேர அரசியல் தொண்டராக ஆளுநர் ஆர்.என் ரவி செயல்பட்டு வருகிறார். அவர் திராவிட அரசியலை குறிவைத்து காய்களை நகர்த்துவதற்குக் காரணம், பெரியார் மீது உள்ள வெறுப்பு. திராவிட கட்சிகளின் வாக்கு வங்கியை உடைக்க வேண்டுமென்பது அவர்கள் திட்டம். அதை உடைக்கும் நோக்கத்தோடு திராவிடம் என்பது பொய். பெரியாரியம் தேவையில்லாதது போன்ற கருத்தை விதைத்து வருகிறார்கள். இதன் மூலம் புதிய தலைமுறையை தம் பக்கம் இழுக்க முடியுமா? முதல் தலைமுறை வாக்காளர்களை வளைக்க முடியுமா? என்று பார்க்கிறார்கள். ஆர்.என்.ரவி, நாகலாந்து ஆளுநராக இருந்தபோது, அங்குள்ள மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி பதட்டத்தை உருவாக்கினார் என்பது தெரியும்.

அவரை தமிழ்நாடு ஆளுநராக அறிவித்த உடனேயே விடுதலை சிறுத்தைகள் சார்பாக ஒரு அறிக்கை வெளியிட்டோம். இவரால் தேவையில்லாத பிரச் சனைகள் வரும்; பதற்றம் உருவாகும் என்று கூறினோம். அதுதான் இப்பொழுது நடக்கிறது. அவர் திமுகவை எதிர்க்க வேண்டும் என்பதைவிட தமிழ் நாட்டில் நிலை கொண்டிருக்கிற திராவிட அரசியலை பலவீனப்படுத்த வேண்டும். தமிழ் தேசிய அரசி யலை பலவீனப்படுத்த வேண்டும். மாநில உரிமைகள், கூட்டாட்சி தத்துவம் இவற்றை யெல்லாம் பலவீனப்படுத்தும் நிகழ்ச்சிநிரல்தான் ஆளுநருடையது. அதற்கான செயல் திட்டங் களைத்தான் ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்து கிறார். இங்கு ஆரியமும் இல்லை, திராவிடமும் இல்லை; எல்லாம் பொய் என்று சொல்வதும் வள்ளுவரையும் வள்ளலாரையும் சனாதனத்தின் அடையாளமாகக் காட்ட முற்படுவதும் இதற்கான சான்றுகள்தான். இவை அப்பட்டமான திரிபுவாதம். சிதம்பரத்திற்கு பக்கத்தில் உள்ள நந்தனார் பிறந்த ஆதனூர் கிராமத்திலுள்ள தலித்துகளுக்கு பூணூல் போடுவது போன்ற சதிச் செயல்களில் இறங்குகிறார். பிஜேபி ஆதரவாளர்களை பல்வேறு கிராமங்களி லிருந்து அங்கு அழைத்து வந்திருக்கிறார்கள். இவையெல்லாம் திட்டமிட்ட அரசியல் சதி.

பாஜகவினர் ஏற்கனவே பல சமூகங்களில், சாதிகளில் ஊடுருவியுள்ளனர். அவர்கள் கைக்குச் சிக்காமல் இருப்பது வட மாவட்டங்களில் அடர்த்தியாக இருக்கக்கூடிய ஒடுக்கப்பட்ட ஆதிதிராவிடர்கள். அந்தப் பிரிவை குறிவைத்து காய் நகர்த்துகிறார்கள். இதை மக்களை புரிந்து கொள்ளச் செய்யவேண்டும். நமது கருத்தியல், அரசியல் பரப்புரை இயக்கத்தை இன்னும் பலப்படுத்திட வேண்டும். இந்திய அளவில் இந்தியா கூட்டணியை உருவாக்கியிருக்கிறோம். தமிழ்நாட்டில் திமுக தலைமையில் கூட்டணியை ஏற்படுத்தியிருக் கிறோம். இந்தக் கூட்டணியை பலப்படுத்தியாக வேண்டும். பிஜேபி கூட்டணி ஒரு தொகுதியில் கூட வெல்ல முடியாதவாறு நமது பரப்புரை இயக்கம் வலுவாக இருக்க வேண்டும்; ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும் என்பதுதான் இப்போதைய உடனடித் தேவை. அதிமுக கூட்டணியில் ஒரு தொகுதியில் வென்றாலும் கூட அது வலதுசாரி களுக்கு ஆதரவாகவேப் போய்முடியும்.

**ஒன்றிய ஆட்சியில் பாசிச பாஜக இருக்கிறது. எனவே, தமிழ்நாட்டிலுள்ள திமுக ஆட்சியிடம் மக்கள், ஜனநாயக சக்திகள் அதிகம் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் குறிப்பாக, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் தலித் மக்கள் கடுமையாக தாக்கப்படுவது கொல்லப்படுவது தொடர்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பாகக் கூட தலித் இளைஞர்கள் மீது சிறுநீர் கழிப்பது உள்ளிட்ட கொடூர சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இது போன்ற விஷயங்களை தடுத்து நிறுத்துவதற்கு அரசு என்ன செய்யவேண்டும்? நம்மைப் போன்ற இயக்கங்கள் என்ன செய்ய வேண்டும்?**


வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தினாலே இது போன்ற கொடுமை களை ஓரளவுக்குத் தடுக்க முடியும். இதில் அரசாங்கத்துக்கு உடன்பாடு இருந்தாலும் இதை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகளிடையே ஒரு பெரிய தயக்கம் இருக்கிறது. காவல்துறை அதிகாரிகளாக இருந்தாலும் சரி, வருவாய்த்துறை அதிகாரிகளாக இருந்தாலும் சரி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் போதுமானது. ஆனால், அதிகாரவர்க்கம், ஆட்சி யாளர்களுக்கே அறிவுரை சொல்லக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. இந்தச் சட்டத்தை தீவிரமாக செயல்படுத்தினால் அது எஸ்சி, எஸ்டிக்கு ஆதரவாக இருக்கிற ஒரு முத்திரையை ஏற்படுத்தி விடும். தேர்தல் அரசியலில் பாதிப்பு ஏற்படுத்தி விடுமென ஆட்சியாளர்களையே ஒப்புக் கொள்ளச் செய்கிற அளவுக்கு அதிகாரவர்க்க துறைகள் இருக்கின்றன. இது ஒரு பொது இயல் பாகவே இருக்கிறது. இந்தச் சட்டத்தை நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தாமலேயே வைத்திருந் தார்கள். 1989இல் இந்தச் சட்டம் வந்தது. 1996ல் இதற்கு விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. இதற்குப் பிறகு ரொம்ப ரொம்பக் குறைவாகத்தான், வருசத்துக்கு 2% என்ற அளவில்தான் நடைமுறைப் படுத்தப்பட்டது. விடுதலை சிறுத்தைகள் போன்ற இயக்கங்கள் போராட்டம், பேரணி நடத்தி அதை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது. என்னென்ன குற்றங்களுக்கு என்னென்ன பிரிவில் வழக்குப் போட வேண்டுமென்பதையெல்லாம் விளக்கமாக எடுத்துச் சொல்லி வழக்கு போட வைத்தோம். அப்படித்தான் மாற்றத்தை உருவாக்கினோம்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுக்கவே

இதுபோல்தான் நடைபெறுகிறது. எஸ்சி எஸ்டி மக்களுக்கு பாதுகாப்பு தரக்கூடிய இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்ற ஒரு நிலை உள்ளது. அப்படி நடைமுறைப்படுத்தப்பட்டால் அது ஓபிசிக்கு எதிராக போய்விடும் என்ற கருத்து உள்ளது. இது அதிகார வர்க்க மனநிலையாகவே மாறியுள்ளது. தென் மாவட்டங்களில் இந்த அளவுக்கு பிரச்சனை தொடர்வதற்கு காரணம், அதிகாரிகள் தலித்துகளுக்கு விரோதமாக இருக்கி றார்கள். இரண்டாவது இந்த வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை அமல்படுத்துவதில் ஆர்வமில்லாத நிலை. மூன்றாவது அந்த மக்களுக்கு நாங்கள்தான் பாதுகாவலர்கள் என்று சொல்லிக்கொள்ள கூடிய இயக்கங்களோ தலைவர்களோ சட்டத்தை நடைமுறைப்படுத்துங்களென்று பெரிதாகக் கோரு வதில்லை. இந்த மாதிரி பிரச்சனைகள் நடக்கும் போது ஒரு எதிர்வினையாக செயல்பாடுகள் இருக்கிறதே தவிர, அதைத் தடுப்பதற்கு, இரண்டு சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அல்லது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, பாதிக்கப்படுகிற மக்கள் தங்களை தற்காத்துக் கொள்வதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள இயக்கங்கள் முனைப்பு காட்டுவதில்லை. மாநிலம் தழுவிய இந்தப் பிரச்சனையை நாம் கையிலெ டுக்கிறபொழுது, நீ ஏன் இந்த பிரச்சினையில் தலையிடுகிறாய் என்று கேட்கும் உதிரிக் குழுக்கள் அதிகமாக உருவாகியிருக்கின்றன. சாதியவாதிகளும் மதவாதிகளும்தான் நிறைய பேர் களத்தில் இருக்கி றார்கள். முற்போக்கு சிந்தனையாளர்கள் எண் ணிக்கை மிகமிக அருகி வருகிறது. கண்ணுக் கெட்டிய தூரத்திலே வலதுசாரி பிற்போக்காளர் களைத்தான் பார்க்கமுடிகிறது. 10 ஆண்டுகளுக்குப் பிறகான தமிழ்நாட்டின் எதிர்காலம், இந்தியாவின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிறது. இன்று உதிரிகளாக இருக்கக்கூடியவர்கள்தான் நாளைய அரசியல் தலைவர்களாக இருக்கப்போகிறார்கள் எனும்போது நமக்கு மிகுந்த கவலை ஏற்படுகிறது. ஜனநாயக சக்திகள் வலியுறுத்துவது, ஆட்சி யாளர்கள் தேர்தல் அரசியலை மட்டுமே கவனத்தில் கொண்டு தலித்துகளுக்கும் தலித் அல்லாத மக்களுக்கும் இடையில் இருக்கின்ற முரண்களை கண்டும் காணாமல் விட்டுவிடக்கூடாது. அரசாங்கம், பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் நிற்க வேண்டும். அவர்களை தலித்துகளென்றோ தலித்துகள் அல்லாதவரென்றோ பார்க்கக்கூடாது. பாதிக்கப்பட்டவர் பக்கம் நிற்பதுதான் அரசாங்கம். அதுதான் சட்டம். அதுதான் ஜனநாயகம்.

### வெல்லும் ஜனநாயகம் மாநாட்டின் முக்கிய செய்தி?

வெல்லும் ஜனநாயகம் என்றால் வெல்லும் இந்தியா என்பது பொருள். வெல்லும் இந்தியா என்பதைத்தான் வெல்லும் ஜனநாயகம் என்று அழைக்கிறோம். ஜனநாயகம் என்பது அடிப்படை கருத்து. வெல்லும் இந்தியா என்பது தேர்தலை அடிப் படையாகக் கொண்டது.எனவேதான் வெல்லும் இந்தியா என்பதை 'வெல்லும் ஜனநாயகம்' என்று வைத்திருக்கிறோம் சனாதனத்தை வீழ்த்துவது ஜனநாயகம்தான். இறுதிப் போரில் ஜனநாயகமே வெல்லும். அந்த வகையில்தான் "வெல்லும் ஜனநாயகம்" மாநாட்டை ஒருங்கிணைக்கிறோம். இந்த மாநாட்டிற்கு அகில இந்திய அளவில் நான்கு தலைவர்களை அழைத்திருக்கிறோம். சிபிஐ தோழர் ராஜா, சிபிஐஎம் தோழர் சீதாராம் யெச்சூரி, சிபிஐஎம்எல் தோழர் திபங்கர், காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தமிழக முதலமைச்சர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கிறார்கள். ❑



**ஜனவரி 21: தோழர் லெனின் நினைவு நூற்றாண்டு!**

பாசிசத்தைத் தோற்கடித்தனர் தோழர் லெனின் வழியில் சோவியத் மக்கள்.
இந்திய மண்ணில் பாசிசத்தைத் தோற்கடிக்க லெனின் நினைவு நாளில் இந்திய மக்கள் உறுதி ஏற்போம்!

**2024 பிப்ரவரி 1**

**பாசிசம் வீழ்க; இந்தியா வெல்க!**

தஞ்சை பேரணியை வெற்றிகரமாக்க உறுதி ஏற்போம்!

இககமாலெ)
தமிழ்நாடு

# மோடியை, பிஜேபியைத் தோற்கடிப்போம்! அடிமைச் சாசனத்தை முறியடிப்போம்!

[16, 17 டிசம்பர் 2023 அன்று கரூரில் நடைபெற்ற, ஏஐசிசிடியு 10வது தமிழ் மாநில மாநாட்டில், ஏஐசிசிடியுவின் அகில இந்திய தலைவர் தோழர் சங்கர் வீ ஆற்றிய, மாநாட்டு நிறைவுரையின் சுருக்கம்]



## பிஜேபி ஆட்சியை வீழ்த்துவோம்! தொழிலாளர் வாழ்வாதாரம் காப்போம்!

தொழிலாளர் வர்க்கம் நிம்மதியான வாழ்க்கை நடத்திட வேண்டுமென்றால், மோடியால் தொழிலாளர் உரிமைகள் பறித்தெடுக்கப்படுவதைத் தடுத்திட வேண்டுமென்றால், 2024 ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கிறது. அதாவது வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் மோடி தலைமையிலான பிஜேபியை ஆட்சியிலிருந்து தூக்கி எறிவது, தேர்தலில் தோற்கடிப்பது என்பது ஆகும். மோடியை, பிஜேபியைத் தோற்கடிப்பது என்பது தொழிலாளர் வர்க்கத்தின் மாபெரும் கடமையாக முன் வந்திருக்கிறது. மோடியைத் தோற்கடிப்பது என்பது அரசியல் மாற்றம், ஆட்சி மாற்றம் குறித்தது மட்டுமல்ல, தொழிலாளர்களின் வாழ்வாதாரம், வாழ்வுரிமை, வேலை, தொழிற்சங்க உரிமைகள் பறிபோகாமல் தடுப்பதோடு நேரடியாக தொடர்புடையது. மோடிக்கு அளிக்கப்படும் வாக்கு தொழிலாளர்கள் தங்களை தற்கொலை செய்து கொள்வதற்கு இணையானது. தொழிலாளர் வாழ்வைக் காத்திட மோடியின் பிஜேபியை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றியே தீர வேண்டும் எனும் நிலை வந்திருக்கிறது.

ஏனென்றால், மோடியின் பிஜேபி ஆட்சி, தற்போது சட்டப்படி கட்டாயமாக இருக்கும், குறைந்தபட்ச ஊதியம் (15000) கொடுக்க வேண்டிய கட்டாயமில்லை, தரை மட்ட ஊதியம் (4500) கொடுத்தாலே போதுமானது என்கிறது. தொழிலாளர் ரத்தம் சிந்தி பெற்ற 8 மணி நேர வேலை உரிமை ஒழிக்கப்பட்டு, 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்கிறது. இஎஸ்ஐ, பிஎப் கட்டாயமில்லை என்கிறது. வேலை நிறுத்த உரிமையைப் பறிக்கிறது. பணி நிரந்தரம் என்கிற கருத்துக் கோப்பையே முற்றாக ஒழிக்க வேண்டும் என கனவு காண்கிறது. அத்தக் கூலிகள் போல இருக்கும் தொழிலாளர்களையே 2047ல் நமது நாட்டில் காணமுடியும் என்கிறது. இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என்பது போல, மூச்சுக்காற்று சூடாக வந்தால் கூட உடனடியாக கேள்வி ஏதுமின்றி, இழப்பீடு ஏதுமின்றி தொழிலாளியை வேலையை விட்டுத் தூக்கிட முதலாளிகளுக்கு உரிமை வேண்டும் என்கிறது. வேலை நிறுத்தம் செய்தால் அந்த சங்க உள் நிர்வாகிகளுக்கு அபராதம் விதிக்க வேண்டும், சங்க வெளித் தலைவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்கிறது. சங்க அங்கீகாரம் என்பது முதலாளிகளின் பாக்கெட் சங்கங்களுக்கு மட்டுமே. தொழிலாளர்களுக்கு இஎஸ்ஐ, பிஎப், பணிக்கொடை, ஓய்வூதியம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அந்த முதலாளிகளும் அரசுமே பொறுப்பு என்பது ஒழிக்கப்பட்டு, அந்தந்த தொழிலாளர்களே பொறுப்பு. அவர்கள் பணம் கொடுத்தால், கொடுக்கும் பணத்தின் அளவிற்கு ஏற்ப நலத் திட்டங்கள் கிடைக்கும் என்கிறது. எல்லா நலவாரியங்களையும் ஒழித்து, நலத் திட்டங்கள் எனபது இன்சூரன்ஸ் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்படுகிறது. அரசும் கூட ஒரு இன்சூரன்ஸ் ஏஜெண்ட் வேலையைத் தான் செய்ய முடியும் என்கிறது. பல லட்சக்கணக்கான தொழிலாளர் பணி புரியும், நாட்டின் போக்குவரத்து நரம்பு மண்டலமான ரயில்வேயை, வங்கிகளை, அரசுக்குச் சொந்தமான, எல்ஐசி உள்ளிட்ட இன்சூரன்ஸ் நிறுவனங்களை, நிலக்கரி முதல் இரும்பு எஃக்கு சுரங்கங்கள் வரையிலான தாதுப் பொருட்களை, தாது மூலாதாரங்

களை, சாலைகளை, துறைமுகங்களை, விமான நிலையங்களை தனியார் கார்ப்பரேட் முதலாளி களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கிறது. இந்தத் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் குரல் கொடுத் தால் அவர்களை விசாரணை ஏதுமின்றி ஆண்டுக் கணக்கில் சிறையில் தள்ளக்கூடிய ஆள்தூக்கி சட்டமான ஊபா சட்டத்தையும் கூட பயன்படுத்து வோம் என்கிறது. இப்படி தொழிலாளர் மீது மோடி ஆட்சி தொடுக்கும் தாக்குதல்கள் எண்ணற்றவை. தொழிலாளர் விரோத, கார்ப்பரேட் முதலாளி ஆதரவு தொகுப்புச் சட்டங்கள் நான்கு ஏற்கனவே நாடாளு மன்றத்தால் நிறைவேற்றப்பட்டு விட்டன. அவற்றை தொகுப்புச் சட்டங்கள் என சொல்வதைவிட, தொழிலாளர் அடிமைச் சாசனங்கள் அல்லது தொழி லாளர் மரண சாசனங்கள் என்றே சொல்ல வேண்டும். அவற்றை அமுலாக்கம் செய்யும் ஆணைக்கான, ஒரே ஒரு கையெழுத்துக்காக அவை காத்திருக்கின்றன. அந்தக் கையெழுத்தை இப்போது போட்டால் தோற்று விடுவோம் என்று நாடாளுமன்றத் தேர்தலுக்காக காத்துக் கொண்டிருக்கிறார் மோடி.

எனவே, அந்தத் தொழிலாளர் அடிமைச் சாசனங் களைத் தடுத்து நிறுத்திட வேண்டுமானால், அந்த அரசியல் கடமையை நிறைவேற்றிட வேண்டு மானால், தொழிலாளர் வாழ்வாதாரத்தைக் காத்திட வேண்டுமானால், தொழிலாளர் வர்க்கத்திற்கு இருக்கும் ஒரு நல்வாய்ப்பைப் பயன்படுத்திட வேண்டுமானால், வரவிருக்கும் நாடாளு மன்றத் தேர்தலில் மோடியை, பிஜேபியை, ஆர் எஸ் எஸ் சை, பாசிச ஆட்சியை மண்ணைக் கவ்விடச் செய்திட வேண்டும்.

பிஜேபியைத் தோற்கடித்திட, பிஜேபிக்கு எதிரான அனைத்து விதமான அரசியல் சக்திகளோடும், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் முதல் பிஜேபியை தேர்தலில் தோற்கடிக்க முனையும் அரசியல் கட்சிகள் வரை கரம் கோர்த்திட தயாராக இருக்கிறோம். இதில் எந்தவித சமரசமும் கிடையாது. ஆனால், அதே நேரத்தில், தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக, உழைக்கும் மக்களுக்கு எதிராக, கார்ப்பரேட் டுகளுக்கு ஆதரவாக எந்த கட்சி, எந்த அரசு என்ன விதமான தாக்குதல் தொடுத்தாலும் அதையும் சமரச மற்ற விதத்தில் எதிர்த்திட உறுதி பூண்டிருக்கிறோம்.

அப்படி பிஜேபியைத் தோற்கடித்திட வேண்டு மானால், கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளை முறிய டித்திட வேண்டுமானால், அதற்கு வலுவான அமைப்பு ஒரு முன்நிபந்தனை ஆகும். நமது அகில இந்திய அறைகூவலை நிறைவேற்றும் திசையில், மாநில மாநாட்டுக்கு முன்னால் பல மாவட்ட மாநாடுகளை நடத்தி இருக்கிறோம். மிச்சமிருக்கும் மாவட்ட மாநாடுகளை விரைவில் நடத்திட வேண்டும். மாநாடுகள் அமைப்பை ஒழுங்கு படுத்துவதற்காக மட்டும் நடத்தப்படுவன அல்ல. அமைப்பை விரிவுபடுத்துவதும் பெற்ற அனுபவங் களின் அடிப்படையில் போராட்டங்களை கூர்மைப் படுத்திடுவதும் கூட அதன் நோக்கமாகும்.

## விரிவடைந்து வரும் வேலைகள்

ஒப்பீட்டுரீதியில் நாம் வளர்ந்திருக்கிறோம். கட்டிடத் தொழிலாளர் மத்தியிலான நமது வேலை மாநிலம் முழுவதும் விரிவடைந்திருக்கிறது. மின் வாரியத் தொழிலாளர் மத்தியில், போக்குவரத்துத் தொழிலாளர் மத்தியில், டாஸ்மாக் தொழிலாளர் மத்தியில், தோட்டத் தொழிலாளர் மத்தியில் புதிதாக வேலைகளைத் துவங்கி இருக்கிறோம். நமது மாநிலச் சங்கங்கள் பல மாவட்டங்களில் கிளைகள் கொண்டதாக வளர்ந்திருக்கின்றன. சிவில் சப்ளைஸ் சுமைதூக்கும் தொழிலாளர் மத்தியில் ஒரு போராட்ட சக்தியாக தொடர்கிறோம். சவால்களையும் சந்திக் கிறோம். வளர்ந்தும் வருகிறோம்.

கிருஷ்ணகிரியில், திருப்பூரில், திருச்சியில், திண்டுக்கல்லில், தேனியில், தென்காசியில், தஞ்சை யில், திருவண்ணாமலையில், வேலூரில், திருப்பத் தூரில் புதிதாக வேலைகளைத் தொடங்கி இருக்கி றோம். விரிவுபடுத்தி இருக்கிறோம்.

கன்யாகுமரியில் தூய்மைப் பணியாளர் மத்தியில், மீனவர் மத்தியில், தோட்டத் தொழிலாளர் மத்தியில் வேலையை விரிவுபடுத்தியிருக்கிறோம். நெல்லையில் பீடித் தொழிலாளர் மத்தியில் இருந்த வேலைகளை மீட்டெடுத்து வருகிறோம். தென்காசி யில் தூய்மைப் பணியாளர் மத்தியில், பீடித் தொழிலாளர் மத்தியில், இதர பல்வேறு அமைப்பாக் கப்படாத தொழிலாளர் மத்தியில் புதிதாக வேலை செய்கிறோம். தூத்துக்குடி துறைமுகத் தொழி லாளர்கள் மட்டுமல்லாமல், கட்டிடத் தொழிலாளர் போன்ற இதர பிரிவினர் மத்தியிலும் வேலை செய்து வருகிறோம். சிவகாசியில் பட்டாசுத் தொழிலாளர் மத்தியில் பணியாற்ற முயற்சித்து வருகிறோம்.

திண்டுக்கல்லில் பஞ்சாலைத் தொழிலாளர், டெக்ஸ் தொழிலாளர் மத்தியில், கரூரில் டெக்ஸ் தொழிலாளர் மத்தியில் நமது வேலைகளை விரிவுபடுத்தியுள்ளோம். நாமக்கல்லில் நமது வேலை விசைத்தறி தொழிலாளர் மத்தியில் குவிந்து

இருக்கிற போதும் இதர பிரிவு தொழிலாளர் மத்தியில் விரிவடைகிறோம். மாறிவரும் தொழிலாளர் சேர்க்கையை படித்தறிந்து அதற்கேற்ப நமது நடைமுறையை மாற்ற முயற்சிக்கிறோம். தறித் தொழிலாளியின் மகன் தறித் தொழிலாளியாக இல்லாத நிலை வந்திருப்பதைக் காண்கிறோம். சேலத்தில் விசைத்தறி தொழிலாளர் மத்தியில் சிறப்பு கவனம் செலுத்தும் அதே நேரத்தில், தூய்மைப் பணியாளர் உள்ளிட்ட பிற பிரிவு தொழிலாளர் மத்தியில் விரிவாக்க முயற்சிக்கிறோம். தர்மபுரியில் மின்வாரிய தொழிலாளர், போக்குவரத்து தொழிலாளர், மருத்துவமனை தொழிலாளர் உள்ளிட்ட பல பிரிவினர் மத்தியில் செயல்பட்டு வருகிறோம். சிவகங்கை, புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட கிராமப்புற மற்றும் டெல்டா மாவட்டங்களிலும், கட்டிடத் தொழிலாளர் உள்ளிட்ட அமைப்பாக்கப்படாத பிரிவினர் பலரையும் திரட்டி வருகிறோம்.

கோவையில் நமது வேலை பிரிக்காலை மையமாக கொண்டதாக, ஒரு படித்தான தன்மை கொண்டதாக இருந்தது. அதனை பலபடித்தான தன்மை கொண்டதாக மாற்ற வேண்டும் என்ற நம் முடிவின் அடிப்படையில் வேலை செய்து இப்போது தூய்மைப் பணியாளர்கள் மத்தியில் நாம் தவிர்க்க முடியாததோர் சக்தியாக வளர்ந்திருக்கிறோம். ஊதிய உயர்வு கோரிய வேலை நிறுத்தப் போராட்டத்தை கூட்டாகவும் சுதந்திரமாகவும் நடத்தி இருக்கிறோம். கட்டிடத் தொழிலாளர் மத்தியில் வேலையைத் தொடங்கி இருக்கிறோம். தொழிற்துறைப் பகுதிகளில் விரிவாக்க முயன்று கொண்டிருக்கிறோம்.

வாணியம்பாடியில் தோல் மற்றும் தோல் பொருள் தொழிலாளர்கள் சங்கம் மீண்டும் ஏஐசிசிடியுவுடன் இணைந்துள்ளது.

சென்னையில் நாம் அடைந்த மிகப்பெரும் பின்னடைவுக்குப் பிறகும் மீண்டு எழுந்திருக்கிறோம். கிட்டத்தட்ட புதிதாக வேலையைத் துவங்கி இருக்கிறோம் எனலாம். கட்டிடத் தொழிலாளர் உள்ளிட்ட பல அமைப்பாக்கப்படாத தொழிலாளர் மத்தியில் வேலை செய்து வருகிறோம். அமைப்பாக்கப்பட்ட தொழிற்சாலைப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதென்பதை ஒரு முக்கிய சவாலாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

## நாம் சந்திக்கும் சவால்கள்

ஆனாலும், நாம் எல்லாம் நன்றாகவே நடக்கிறது என சுயதிருப்தி அடைந்துவிட முடியாது. கீழ்க் காணும் அம்சங்களை ஒரு சவாலாக ஏற்று வரவிருக்கும் காலத்தில் செயலாற்றிட வேண்டும்.

- நாமும் சங்கம் நடத்துகிறோம் என்கிற அளவுக்கு இருந்தால் போதாது. ஒவ்வொரு மாவட்டத்திலும் புறநிலை ரீதியாக கொந்தளிக்கும் நிலையில் உள்ள தொழிலாளர் பிரிவினரை அடையாளம் காண்பது, அவர்கள் மத்தியில் திட்ட மிட்ட விதத்தில் வேலைகளை வளர்த்தெடுப்பது ஒரு முக்கிய கடமையாக முன்வந்திருக்கிறது.

- மின்வாரியத் தொழிலாளர், போக்குவரத்து தொழிலாளர் போல, தாக்குதல் திறன்மிக்க தொழிலாளர் பிரிவினர் மத்தியில் நமது வேலைகளை வளர்த்தெடுக்க கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- அநீதிக்கு உள்ளாகும் அரசுத் துறை, தனியார் துறைகளில் பணியாற்றும் ஒப்பந்த முறை மற்றும் வேறு பல்வேறு முறைசாரா முறைகளில் பணியாற்றும் தொழிலாளர் மத்தியில் பணியாற்ற இன்னமும் கூடுதல் கவனம் தேவை.

- மாவட்ட வாரியாக, நாம் கவனம் செலுத்த தேர்ந்தெடுத்திருக்கும் துறை தொழிலாளர் மத்தியில் பல்லாயிரக்கணக்கானோரை சென்றடைவதும் அவர்களைப் போராட்டங்களில் அணிதிரட்டுவதும், அவர்களை சங்க உறுப்பினர்களாக மாற்றுவதும் உடனடிக் கடமையாகும்.

- நமது மாநிலச் சங்கங்கள் பலம் பெற்றவையாக வளர்க்கப்பட வேண்டும். மாறிவரும் தொழில் துறை மற்றும் அரசியல் சூழலுக்கேற்ப தேவையான மாற்றங்களை நமது நடைமுறையில் கொண்டுவர சற்றும் தயங்கக் கூடாது. உதாரணமாக, கட்டிட அரங்கில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. நாளை நலவாரியமே இருக்காது எனும் நிலையை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கிறது. அந்தப் பின்னணியில், நமது கட்டிடத் தொழிலாளர் இயக்கத்தை, நடைமுறையை மறுதிசைவழிப் படுத்துவது மிக முக்கிய கடமை ஆகும். நலவாரியம் சார்ந்த நடைமுறையை உதறித் தள்ளிவிட்டு, கட்டிடத் தொழிலாளர் இயக்கத்தை ஒரு போர்க் குணமிக்க போராட்ட இயக்கமாக மாற்றி யமைப்பது நமது தலையாயக் கடமையாக இந்த அரங்கில் முன்வந்திருக்கிறது. அதை நாம் நிறை வேற்றிட வேண்டும். சின்னஞ்சிறு கட்டிடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை நலப் பயன்களை

விரிவுபடுத்தக் கோரி அரசுக்கு எதிரான போராட்டங்களில் அணிதிரட்டிட வேண்டும். அதேபோல, பல பன்னாட்டுக் கம்பெனிகள், கார்ப்பரேட் முதலாளிகள் இப்போது கட்டிடத் துறைக்குள்ளும் பொருளாதாரத்திலும் ஆதிக்கம் செலுத்தி வருவதைக் காண்கிறோம். அத்தகைய பெரிய கம்பெனிகளில் வேலை செய்யும் தொழி லாளர் மத்தியில் சங்கங்களே இல்லை எனும் நிலை நிலவுகிறது. நாம் அத்தகையத் தொழிலாளர்களைத் திரட்டிட கவனம் செலுத்த வேண்டும். அரசு அதிகாரி கள், ரியல் எஸ்டேட் முதலாளிகள், நில மா∴பியாக் கள், பெரும் கட்டுமான நிறுவனங்கள், ஒப்பந்ததாரர் கள் ஆகியோரின் கள்ளக் கூட்டணிக்கு எதிராக தொழிலாளர்களைத் திரட்டிட வேண்டும். இப்படி நமது வேலைகளை மறுதிசைவழிப்படுத்தும் போக்கில், கட்டிடத் தொழிலாளர் சங்கத்தை ஒரு வர்க்கப் போராட்டச் சங்கமாக, பெருமூலதனத்திற்கு, அரசுக்கு சவால் விடும் சங்கமாக வளர்த்திட வேண்டும். “ஒரு புரட்சிகர கட்டிடத் தொழிலாளர் இயக்கத்தைக் கட்டி எழுப்புவோம்” எனும் தலைப்பில் ஆங்கிலம், இந்தி, தமிழ் மொழிகளில் அகில இந்திய மாநாட்டின் போது வெளியிடப்பட்ட புத்தகத்தை அனைவரும் படித்து அதனை நடை முறைப்படுத்திட வேண்டும். விரைவில் நடக்க விருக்கும் கட்டிடத் தொழிலாளர் பயிற்சி முகாம் இது போன்ற பிரச்சனைகளை விவாதிக்கும் என கருது கிறேன்.

- நிர்வாக வசதிகளுக்காக சங்கங்களை நாம் மாநிலச் சங்கங்களாக பதிவு செய்திருக்கிறோம். கடந்த காலங்களில், பொதுவாக, இவை அனைத்தும் மாவட்டச் சங்கங்களாகவே பதிவு செய்யப்பட்டன. இப்போது மாநிலச் சங்கங்களாக இருப்பதால் அவற்றை மாவட்டத்தைத் தாண்டிய சங்கங்களாக நாம் பார்க்க முடியாது. விதிவிலக்காக, சில சங்கங்கள் மட்டும் அப்படி இருக்க வேண்டி இருக்க லாம். அத்தகைய சங்கங்கள் அனைத்தின் செயல் பாடும் மாவட்ட ஏஐசிசிடியு கமிட்டி மட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அனைத்து தொழிற் சங்க நடவடிக்கைகளையும் மையத் தொழிற்சங்க நடவடிக்கையோடு இணைக்கும் போதுதான் குறிப்பிட்ட பிரிவு சங்கங்களின் நடவடிக்கைகளும் வேகம் பெறும். நாம் கனவு காணும் தொழிலாளர் ஒற்றுமையையும் நிதர்சனமாக்க முடியும்.

- பரந்த தொழிலாளர்களை பெரும் எண்ணிக் கையில் உறுப்பினர்களாகச் சேர்ப்பது தொழிற்சங்க இயக்கத்தின் மிக முக்கியமான ஒரு அங்கம்தான். ஆனால், அதில் மட்டும் நாம் சுயதிருப்தி அடைந்து விட முடியாது. சங்க உறுப்பினர்களில் எவ்வளவு பேரை சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறோம், போராட்டங்களில் அணிதிரட்டுகிறோம் என்பது மிக முக்கியமான அளவுகோல் ஆகும். அதுதான் சங்கத்தை உயிர்த் துடிப்பானதாகவும் செயல் துடிப்பானதாகவும் பணியாற்ற உதவும். சங்க உறுப்பினர் எண்ணிக்கை மட்டுமல்ல, தொழிலாளர் அணிதிரட்டல் பலம் சங்க வளர்ச்சியின் முக்கியமான அளவுகோலாக கொள்ளப்பட வேண்டும். அதன் மூலம் தான், தொழிலாளர் பங்கேற்கும் தொழிற்சங்க ஜனநாயகம் என்பதை, ஜனநாயகப்படுத்தப்பட்ட தொழிற்சங்கங்கள் என்பதை நாம் அடைய முடியும். அப்போதுதான் தொழிற்சங்கம் அதிகாரத்துவமய மாவதைத் தடுக்க முடியும்.

- வர்க்க அரசியல் என்பது ஒரு கட்சி அரசியல் அல்ல. ஆனால், தொழிலாளர் வர்க்கத்தை, வர்க்க அரசியல் செயல் துடிப்புடன் வளர்க்கவில்லை என்றால், அந்தச் சங்கத்தை, இயக்கத்தை, சமரசமற்ற போராட்டச் சங்கமாக, இயக்கமாக வளர்த்திட முடியாது. அது மட்டுமல்ல, வரவிருக்கும் காலங் களில், தொழிலாளர்களுக்கு சட்டரீதியான வாய்ப்பு கள் மூடப்படுமென்றால், அத்தகைய தருணங் களிலும் தொழிற்சங்க இயக்கத்தை துடிப்பானதாக வைத்திட, தொழிலாளர் போராட்டங்கள் நான்கு சுவர்களுக்குள் கட்டுண்டு கிடக்கும் நிலைமை யிலிருந்து மீட்டெடுத்திட வேண்டும்.

இந்திய தொழிலாளர் வர்க்கம், தமிழக தொழிலாளர் வர்க்கம் ஏராளமான தியாகங்கள் செய்துதான் தொழிற்சங்க இயக்கம் கட்டி எழுப்பப் பட்டது. சுதந்தரப் போராட்ட காலத்தில், வெள்ளைப் பரங்கியர்களுக்கு எதிராக துப்பாக்கிக் குண்டு களையும் பீரங்கிகளையும் எதிர்கொண்டு போராடிய வர்க்கம் இது. அத்தகைய சூழல் வருமானால், அதையும் எதிர்கொள்ள தொழிலாளர்களைத் தயார் செய்வதுதான் புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்தின் கடமை ஆகும்.

அத்தகைய கடமைகளை நிறைவேற்றிட, தமிழக தொழிலாளர் வர்க்கத்தைத் தயார் செய்திட, இந்த 10வது மாநில மாநாட்டில் உறுதி ஏற்போம், தோழர்களே.

இன்குலாப்! ஜிந்தாபாத்!

# மோடியின் தமிழ்நாடு வருகை!

"திரும்பிப்போ மோடி" ட்விட்டர் இயக்கத்தால் மோடியை, பாஜகவை பீதியடையச் செய்த தமிழ்நாடு, "வருக மோடி, வணக்கம் மோடி" என்று ட்விட்டர் இயக்கம் நடத்தி திருச்சி வந்த மோடியை வரவேற்றுள்ளதாக டைம்ஸ் ஆ.ஃப் இண்டியா நாளேடு மகிழ்ச்சி தெரிவிக்கிறது. "வணக்கம் மோடி" ஹாஷ்டேக் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட சுட்டுரைகளைப் பெற்றுள்ளதைச் சுட்டிக் காட்டி பாஜக தேசிய அமைப்புச் செயலாளர் பி.எல்.சந்தோஷ், தமிழ்நாடு மக்களை பாராட்டி மகிழ்ந்துள்ளதையும் அந்த ஏடு செய்தியாக்கி உள்ளது. இதை எதிரொலிப்பது போல், "புத்தாண்டின் எனது முதல் பொது நிகழ்ச்சி, தமிழ்நாட்டில் நடைபெறுவது பெரும் பாக்கியம்" எனக் கூறி மோடி தன்னுடைய மகிழ்ச்சியை 'பொங்க' விட்டிருக்கிறார்.

திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தின் புதிய முனைய திறப்பு, பல்வேறு தொழில் திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டுதல் (ரூ.20,140 கோடி என்று சொல்லப்படுகிறது. மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை ஒற்றை செங்கல்லோடு இருப்பதையும் மறந்துவிடமுடியாது), பாரதிதாசன் பல்கலைக்கழக 38வது பட்டமளிப்பு விழா என பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார். விமானநிலைய விழாவில் பேசிய பிரதமர் மோடி தனது "மேக் இன் இண்டியா" தூதுவராக தமிழ்நாடு இருப்பதாகக் கூறி ஸ்டாலினை புன்முறுவல் பூக்கச் செய்தார் மோடி. பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த ஆட்சி மாநிலங்களுக்கு ரூ.30 லட்சம் கோடி வழங்கியிருந்தது. ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் தனது ஆட்சி, ரூ.120 லட்சம் கோடி வழங்கியிருப்பதாகக் கூறி ஸ்டாலினை நாற்காலியின் நுனியில் உட்கார வைத்துவிட்டார். இதில் தமிழ்நாட்டிற்கு எவ்வளவு வழங்கப்பட்டது என்று துல்லியமாக சொல்லவில்லை. ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் இரண்டரை மடங்கு அதிகம் நிதி கொடுத்து விட்டதாகக் கூறி முதல்வரை உதடு பிதுக்கச் செய்துவிட்டார் பிரதமர். டிசம்பர் மாத வெள்ளத்தில் மரணமுற்றவர்கள், உடமைகள் இழந்தவர்கள் குறித்து 'வேதனைப்படுவதாக' தெரிவித்த மோடி, மாநில அரசு கேட்ட ரூ. 21,700 கோடி பேரிடர் நிவாரணம் பற்றி வாய் திறக்கவில்லை. (ஜிஎஸ்டி யில் உ.பி, ரூ. 3 லட்சம் கோடி கொடுத்து, ரூ. 9 லட்சம் கோடி பெற்றுள்ளது. ஆனால் தமிழ்நாடு ரூ. 5 லட்சம் கோடி கொடுத்து வெறும் ரூ. 2லட்சம் கோடி மட்டுமே பெற்றுள்ளது).

பாரதிதாசன் பல்கலைக்கழக 38வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய மோடி அங்கும் அவரது 10 ஆண்டு காலச் சாதனையை பட்டியலிட்டுள்ளார். 74ஆக இருந்த விமான நிலையங்கள் 150 ஆக அதிகரித்து விட்டன. 100 க்கு குறைவாக இருந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஒரு லட்சத்துக்கும் கூடுதலாக அதிகரித்து விட்டதாகவும்; 2014ல் நாலாயிரமாக இருந்த பேடன்ட்கள் 2023ல் 50ஆயிரமாக அதிகரித்து விட்டதாகவும் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். 2047ல் வளர்ந்த நாடாகும் திசையில் இளைஞர்கள் உந்து சக்தியாக இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார். ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்ற வாக்குறுதியின்படி 20 கோடி வேலைகள் பற்றி பிரதமர் வாய்திறக்கவில்லை. ஆனால், இந்திய இளைஞர்களுக்கு "இப்போது இருப்பதை போன்ற மிகச் சிறந்த காலம் இனி எப்போதும் இருக்கப் போவதில்லை" என்று நாக்கூசாமல் பேசுகிறார்.

ஜனவரி 22 ராமர் கோவில் திறப்பு பற்றி, "அயோத்தி கோவிலில் தமிழ்நாட்டின் முத்திரை" என தினத்தந்தி தலையங்கம் எழுதுகிறது. குமரியிலிருந்தும் ராமேஸ்வரத்திலிருந்தும் புனித நீர், நாமக்கல்லில் இருந்து 1200 கிலோ மணி, மகாபலிபுரத்திலிருந்து கதவுகள், தமிழ்நாடு முழுவதும் இருந்து செங்கற்கள், சென்னை அய்அய்டியின் தொழில்நுட்ப ஆலோசனை, 93 வயதான வழக்கறிஞர் பராசரனின் வழக்காடு திறன் இவையெல்லாம் "அயோத்தி ராமர் கோவிலில் தமிழ்நாட்டு முத்திரைகள்" என தினத்தந்தி கூறுகிறது. காசி தமிழ்ச் சங்கமம் கலாச்சாரச் சங்கமம் என சிறப்புக்கட்டுரை தீட்டியுள்ள தினகரன் தமிழ்நாட்டு பாரதிக்கும் காசிக்கும் உள்ள கலாச்சார பிணைப்பு பற்றி பேசுகிறது. பாஜக–ஆர்எஸ்எஸ் சனாதன சக்திகள் தெருத்தெருவாக இறங்கி அயோத்திக்கு வருமாறு

அழைப்பு விடுத்து வருகின்றனர். ஆனால், ராமனை ஈவிஎம் (மின்னணு வாக்கு எந்திரம்) ஆக்கி வாக்குகளை வாரிக் குவிக்கும் திட்டத்துடன் இறங்கியுள்ள பிரதமர் மோடி, திருச்சியில் ராமர் கோவில் பற்றி பேசாதது வியப்பளிக்கிறது. தமிழ் நாட்டில் ராமனுக்கு உள்ள வாக்கு பலம் பற்றி இன்னும் நம்பத் தகுந்த வட்டாரங்களில் இருந்து நல்ல தகவல் கிடைக்கவில்லை போலும்.

திருச்சி விமான நிலைய நிகழ்ச்சியில் பேசிய மோடி, வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதனுக்கும் விஜயகாந்துக்கும் புகழஞ்சலி செலுத்தியுள்ளார். சுவாமிநாதனுக்கு ஒரு வரியில் அஞ்சலி கூறியுள்ள அவர், விஜயகாந்துக்கு ஒரு சிறப்புக் கட்டுரையே வெளியிட்டிருக்கிறார்! பல நாளேடுகளும் இதை தோளில் தூக்கி வெளியிட்டுள்ளன. ஜெயலலிதா, கருணாநிதி மறைவின் போதுகூட இப்படி ஒரு உருக்கமான புகழஞ்சலியை மோடி வெளியிட வில்லை. 'தமிழ்நாட்டின் இருதுருவ அரசியல்' பின்புலத்தில் விஜயகாந்த் மூன்றாவது அரசியல் சக்தியாக எழுந்து வந்ததை மோடியின் புகழஞ்சலி அழுத்தமாக குறிப்பிடுகிறது. விஜயகாந்த் மறைவை அடுத்து, அரசு மரியாதை உள்ளிட்ட விரிவான ஏற்பாடுகளைச் செய்து விஜயகாந்த் அனுதாபி களிடம் நல்ல பெயரும் பிரமேலதாவிடம் நன்றியை யும் பெற்றுள்ள ஸ்டாலின் ஒரு துருவம். பாஜகவிட மிருந்து விலகி எதிர்க்கட்சி தோற்றம், இஸ்லாமியர் மாநாட்டில் பங்கேற்பு, பில்கிஸ்பானோ தீர்ப்புக்கு வரவேற்பு, கால் வலியை பொறுத்து ராமர் கோவிலுக்கு செல்வது அமையும் என பாம்புக்கு தலையும் மீனுக்கு வாலும் காட்டும் பழனிச்சாமி மற்றொரு துருவம். இந்தப் பின்னணியில் தேமுதிகவை வளைக்க, முடிந்தால் அப்படியே விழுங்க எத்தனிக்கும் முயற்சிதான் விஜயகாந்துக்கு கிடைத்த மோடியின் ஆகப்பெரும் புகழஞ்சலி!

பாஜக தலைவர்கள் பலரும் வரிசை கட்டி விஜயகாந்த் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அவரது இறுதிநிகழ்வில் திரண்ட மக்கள் திரள், தமிழ்நாடு முழுவதும் வெளிப்பட்ட விஜயகாந்துக்காக உருவான அனுதாப பெருவெள்ளம் என்ற பின்னணி யில் தேர்தல் எந்திர மோடி இப்படி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது!

மோடி நிச்சயம் ராமர் கோவில் பற்றி பேசுவார் என்று எதிர்பார்த்திருந்த ஸ்டாலின், விமானநிலைய வரவேற்பின்போது, பெரியாரின் வைக்கம் கோவில் நுழைவு போராட்டம் பற்றிய புத்தகத்தை பரிசாக கொடுத்து மோடியை வரவேற்றார். முதல்வரது விமானநிலைய உரையில், வெள்ள நிவாரண கோரிக்கையை வலியுறுத்தும்போது, "இது மக்கள் நலக் கோரிக்கை; அரசியல் முழக்கமல்ல" என மோடியை இடிக்கும் விதமாகப் பேசினார். பல்கலைக் கழக உரையின்போதும் அகில இந்திய அளவில் கல்வியில் முன்னேறியுள்ள தமிழ்நாடு பற்றி புள்ளிவிவரங்களை குறிப்பிட்டுப் பேசினார். இது நீதிக்கட்சி காலத்திலேயே விதைக்கப்பட்டு தொடர்ந்து வளர்க்கப்பட்டு வருவதாகவும் பேசி யுள்ளார். கல்வியில் பாஜக–ஆர்எஸ்எஸ் அரசியலுக் கும் திராவிட அரசியலுக்கும் உள்ள அடிப்படையான கருத்தியல் வேறுபாட்டை முதலமைச்சர் உணர்த்த முற்பட்டுள்ளார். ஆனால், பல ஆண்டுகளாக பட்டமளிப்பு விழா நடத்தாமல் மாணவர்களை பெரும் பாதிப்புக்குள்ளாக்கிய ஆளுநரின் அடாவடிச் செயலை எதிர்த்துப் போராடிய இடதுசாரி மாணவர் அமைப்பான இந்திய மாணவர் சங்கத் தலைவர்களை போலீஸ் கண்காணிப்பில் வைத்து, கல்வித் துறை யில் ஜனநாயகத்தை மறுத்தது சமூகநீதி ஆகுமா? திருச்சி நிகழ்ச்சிகளில் பாஜகவினர், மோடி பேசும் போது அவரை வாழ்த்தி முழக்கம் எழுப்பச் செய்ததை யும் ஸ்டாலின் பேசும்போது கூச்சல் குழப்பம் எழுப்பச் செய்ததையும் முதலமைச்சரும் கவனித்திருப்பார்.

திருச்சி நிகழ்ச்சிகளில் மோடி, 'அரசியல் ராமன்' பற்றி பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால் தெள்ளத் தெளிவாக மக்களவைத் தேர்தல் நிகழ்ச்சி நிரலையே உருட்டி விட்டிருக்கிறார். அதிமுக உள்ளிட்ட துண்டு துக்காணிகளைக் கொண்ட கூட்டணி கட்ட தேமுதிகவை குறிவைத்துள்ளார். பாஜக–ஆர்எஸ்எஸ் திட்டத்தின்படி, தெருத்தெருவாக சனாதனக்கும்பல் ராமர் கோவிலுக்கு அழைப்பு விடுவதும் மோடியின் உருப்பெறாத கூட்டணி முழக்கமும் ஒன்றிணைந்து பாஜகவுக்கு தேர்தலில் பலனளிக்கலாம் என்று நம்புகிறார் மோடி. பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பேசும்போது, பாரதிதாசன் பாடலில் ஒரு வரியான, "புதியதோர் உலகம் செய்வோம்" என்று உதிர்த்திருக்கிறார் மோடி.

ஜனவரி 26, திருச்சியில் நடைபெறும் 'வெல்லும் ஜனநாயகம்' மாநாடும், பிப்ரவரி 1, தஞ்சையில் நடக்கவிருக்கும் "வீழ்க பாசிசம், வெல்க இந்தியா" பேரணியும் சொல்லவிருப்பது, "கெட்டப் போரிடும் (சனாதன) உலகத்தை (மோடி ஆட்சியை) வேரோடு சாய்ப்போம்"!

**– பாலசுந்தரம்**

# பெண்களுக்கு எதிரான அனைத்து மகளிர் காவல்நிலையங்கள்

*1992ஆம் ஆண்டு சென்னை ஆயிரம் விளக்கில் முதல் அனைத்து மகளிர் காவல்நிலையம் துவங்கப் பட்டது. அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா, வரலாற்றில் இல்லாத முன்மாதிரி என்று வர்ணித்தார். பெண்கள் தங்களின் பிரச்சனைகளை ஆண் காவலர் களிடம் வெளிப்படுத்துவதில், காவல்நிலையத்தை அணுகுவதில் உள்ள பிரச்சனைகளைக் களைவதற் காகத்தான் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்படுவதாக அவர் அறிவித்தார். பெண் களுக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்காகவும் திருமண உறவுப் பிரச்சனைகளை விசாரிப்பதற் காகவும் அனைத்து மகளிர் காவல்நிலையங்கள் அமைக்கப்பட்டதென்று 2013–2014 சட்டமன்றத்தில் ஜெயலலிதா தாக்கல் செய்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. தற்போது 222 அனைத்து மகளிர் காவல்நிலையங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.*

*ஆனால், பெண்களுக்கு எதிரான (பெண்ணின் அந்தரங்கமான தனிப்பட்ட பிரச்சனைகளைக் கூட விசாரிக்க வேண்டிய) பிரச்சனைகள் குறித்து அனைத்து மகளிர் காவல்நிலையம் விசாரிப்ப தில்லை. மிகப்பெரும் அளவுக்கு திருமண/குடும்பப் பிரச்சனைகளை கட்டப்பஞ்சாயத்து செய்யும் இடமாகவே மாறிவிட்டது.*

*சமூகத்தில் நிலவும் ஆணாதிக்கப் போக்கு அனைத்து மகளிர் காவல்நிலையங்களிலும் நிலவுகிறது. ஆண் காவலர்கள் பயன்படுத்தும் பெண்கள் விரோத, பெண்களை இழிவுபடுத்தும் வசவுகளும் பெண்களைத் தாக்குவதும் மகளிர் காவல்நிலையத்தில் சாதாரணமாக நடக்கின்றன. காவல்நிலையங்களில் வழக்கமாகக் காணப்படும் லஞ்ச லாவண்யத்திற்கு மகளிர் காவல்நிலையங் களும் விதிவிலக்கல்ல. சொல்லப்போனால் இன்னும் கொடூரமானதாகக் கூட இருக்கிறது. அனைத்து மகளிர் காவல்நிலையங்கள் அனைத்தும் பெரும் பாலும் ஆண்களுக்கு ஆதரவான காவல் நிலையங் களாகவே இருக்கின்றன. விதிவிலக்கான நிகழ்வு களில் அல்லது வழக்கத்திற்கு மாறாகச் செயல்படும் பெண்ணிய அதிகாரிகளின் செயல்பாடுகளின்போது மட்டுமே பெண்களுக்கு ஆதரவாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படுகின்றன. சமூகத் திலும் அரசியலிலும் நிலவும் ஆணாதிக்கமும் அதற்குத் துணையாக இருக்கும் அரசின் கொள்கை களும் அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் இந்தப் பெண்கள் விரோதப் போக்கிற்குக் காரணமாக இருக்கின்றன.*

*மதுரையில் நடந்த ஒரு வழக்கில் பாதிக்கப் பட்ட பெண்ணின் கணவன் சிவராமன் கிராம நிர்வாக அலுவலராக இருக்கிறார். காதலித்து மணந்த பெண்ணை அவர் கொடுமை செய்து வரதட்சணை கேட்டு துன்புறுத்தி விரட்டி வந்துள்ளார். அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் அப் பிரச்சனையில் தலையீடு செய்தது. குற்றம் செய்த கணவன் மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட பெண் கோரினார். அனைத்து மகளிர் காவல்நிலையம் வழக்குப் பதிய மறுத்தது. இதற்கு எதிராக காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்கப்பட்டது. வழக்கை வேறு ஒரு அதிகாரிக்கு காவல்துறை கண்காணிப்பாளர் மாற்றினார். அந்த அதிகாரியும் வழக்குப் பதிவு செய்ய மறுத்தார். சமரச மையத்திற்கு அனுப்புவதாகச் சொன்னார். வழக்குப் பதிந்த பின்னர் சமரச மையத் திற்கு அனுப்பலாமே என பெண்ணின் தரப்பில் வைத்த கோரிக்கையைக் கண்டு கொள்ளவில்லை. அதனைக் கண்டித்தும் தொடர்ந்து பெண்களுக்கு எதிராகச் செயல்படும் மகளிர் காவல் நிலையங் களைக் கண்டித்தும் 18.12.23 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு அஇமுபெக மதுரை மாவட்ட அமைப்பாளர் தோழர் வள்ளிமயில் தலைமை தாங்கினார். தோழர் ஹில்டா மேரி, குறிஞ்சியர் மக்கள் ஜனநாயக இயக்கத்தின் தோழர் பவானி, வழக்கறிஞர் தோழர் கோமதி, பெண்கள் கழகத்தின் மாநில குழு உறுப்பினர் தோழர் மல்லிகா, தோழர் மங்கையர்க் கரசி, இககமாலெ மாநிலக் குழு உறுப்பினர் தோழர் ஈஸ்வரி ஆகியோர் உரையாற் றினர். பேசிய பெண்களின் கடுங்கோபம் பொது மக்களையும், காவலர்களையும் உலுக்கியது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மனுநீதி நாளுக்கு வந்திருந்த பெண்கள் சிலரும் ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டனர்.*

*பின்னர், பெண்கள் கழகத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியரைச் சந்தித்தனர். தண்டிக்கப்பட வேண்டிய குற்றமிழைத்த கிராம நிர்வாக அலுவலரின் மீது புகார் கொடுத்த பெண்ணும் அவர்களுடன் சென்று மாவட்ட ஆட்சியரைச்*

சந்தித்தார். உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் தமிழ்நாடு அரசு சமரசத்திற்கு முதலிடம் என்று சொல்வதையும் சுட்டிக்காட்டிய மாவட்ட ஆட்சியர் குற்றவாளியான கிராம நிர்வாக அலுவலரைப் பாதுகாக்கும் தொனியிலேயே பேசினார். பெண்களுக்கு எதிரான குற்றங்களில் பொதுவாக பாதிக்கப்பட்ட பெண் களே குற்றவாளிகளாகச் சித்தரிக்கப் படுவதை நாம் தொடர்ந்து பார்த்து வருகிறோம். தமிழ்நாட்டில் பெண்களுக்கு என பிரத்யேகமாக உருவாக்கப் பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் அதற்கு விதிவிலக்கல்ல என்பதாவே இருக்கின்றன. பெண்கள் அமைப்புகள் இதற்கு எதிராக களம் காண வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**– சி. மதிவாணன்**

களஆய்வு

# தூத்துக்குடி மாவட்ட மழை வெள்ளம் பற்றி ஒரு குறிப்பு

2023 டிசம்பர் 16 அன்று மாலை துவங்கி டிசம்பர் 18 மதியம் வரை விடாது பெய்த மழையோடு அணைகளில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீரும் சேர்ந்து 18ஆம் தேதி தூத்துக்குடியில் மாவட்டங் களில் பெரும் பாதிப்பைக் கொண்டு வந்தது. வரலாறு காணாத மழை. 17ந் தேதி காயல் பட்டினத் தில் 93 சென்டிமீட்டரும் திருச்செந்தூரில் 69 சென்டிமீட்டரும் ஸ்ரீவைகுண்டத்தில் 63 சென்டி மீட்டரும் அதிகபட்சம் மழை பெய்தது.

கோரம்பள்ளம், மீள விட்டான் குளத்து நீர் சூழ்ந்து தூத்துக்குடி நகரத்தை ஸ்தம்பிக்க வைத்தது. தூத்துக்குடி நகரமெங்கும் மழை வெள்ளம். புதிய பேருந்து நிலையம், பி அன் டி காலனி, முத்தம்மாள் நகர், ரஹ்மத் நகர், ஆதிபராசக்தி நகர் உட்பட ஏராளமான பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கடிக்கப் பட்டன. தாமிரபரணி நதி உடைந்து ஏரல், உமரிக்காடு, முக்காணி, ஆத்தூர் பெரும் பாதிப்புக்கு உள்ளானது. நூற்றுக்கணக்கான வீடுகள் உடைந்து போய்விட்டன. தூத்துக்குடி மாவட்டத்தில் இருபதுக் கும் மேற்பட்டவர்கள் இறந்து போனதாக சொல்லப் படுகிறது. கால்நடைகளும் ஏராளமாக இறந்து நீரில் மிதந்தன. வீட்டினுள் வெள்ளநீர் புகுந்து ஏராளமான பொருள்கள் சேதமாகியுள்ளன.

விவசாயத்தைப் பொறுத்தவரை தூத்துக்குடி மாவட்டத்தில் இரண்டு விதமான விவசாயம். வடக்கு மாவட்டத்தில் மானா வாரி விவசாயம், தெற்கு மாவட்டத்தில் பாசனப் பயிர் விவசாயம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வடபகுதியான விளாத்திகுளம், கோவில்பட்டி, எட்டயபுரம், ஒட்டப் பிடாரம் பகுதியில் மான வாரிபயிர்களான மிளகாய், வெங்காயம், பாசிப்பயிறு, மக்காச்சோளம் 1.7 லட்சம் ஹெக்டேருக்கு மேற்பட்ட பகுதியில் பயிரிடப் படுகிறது. தூத்துக்குடி மாவட்டத் தினுடைய தெற்கு பகுதியான ஸ்ரீவைகுண்டம், திருச் செந்தூர் பகுதியில் பாசன பயிர்களான நெல், வாழை, வெற்றிலை பயிரிடப்படுகிறது. இந்தப் பயிர்களெல்லாம் நாசமாகி விட்டன.

பாசன பயிருக்கு 17500 ரூபாயும் மானாவாரி பயிருக்கு ஹெக்டருக்கு 8,500 ரூபாயும் அரசால் நிவாரணம் வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் தொகை உயர்த்தப்பட வேண்டும்.

எத்தனை ஏக்கர் நிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டாலும் 5 ஏக்கர் மட்டுமே அரசால் கணக்கிலெடுக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட நிலம் முழுமையும் கணக்கிலெடுக்கப்பட வேண்டும், காப்பீடு செய்யப்பட்ட நிலத்திற்கு பயிர் காப்பீடு முழுமையாக வழங்க வேண்டும், மானிய விலையில் விதை வழங்க வேண்டும், பயிர்க் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவின் உப்பு உற்பத்தியில் முன்னணி மாவட்டம் தூத்துக்குடி. தூத்துக்குடி மாவட்டத்தில் விளாத்திகுளத்தில் ஆரம்பித்து ஆறுமுகநேரி வரை ஏறத்தாழ 70 கிலோமீட்டர் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. 100 கோடி ரூபாய் மதிப்புள்ள 6 லட்சம் டன் உப்பு மழை நீரில் கரைந்துள்ளது அல்லது சேதமாக்கப்பட்டிருக்கிறது.

தூத்துக்குடி துறைமுகம் மூலம் ஏற்றுமதி/ இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் சரக்குப் பெட்டக மையங்களில் (CFS) வைக்கப்படுகிறது. 150 சரக்குப் பெட்டக மையங்களில் 75 சரக்கு பெட்டகங்களில் சேமிக்கப்பட்டிருந்த 100 கோடி ரூபாய் மதிப்புள்ள ஜவுளி மற்றும் உணவுப் பொருட்கள் வெள்ளத்தால் சேதம் ஆகிவிட்டன.

ஆயிரக்கணக்கான கடைகள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் ஏரல் சிறு வணிக நகரம். இங்கு 500க்கும் மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. தண்ணீர் நுழையாத

கடைகளே கிடையாது. வணிகர்கள் வாழ வழி யில்லாத நிலையில், வட்டியில்லாக்கடன் வேண்டும், வணிக நல வாரியம் மூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும், இரண்டு ஆண்டுகளுக்கு கடனுக்கான மாதாந்திர தவணை நிறுத்தி வைக்கப் பட வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

மத்திய அரசினுடைய ஆய்வு 5 ஆயிரம் கோடிக்கு மேல் இழப்பு இருக்கும் என்கிறது. ஆனால் உண்மையான பாதிப்பு அதைவிட அதிகம்.

வெள்ளத்திற்கு முன் குளங்களை தூர்வாரி முறையாக மராமத்து செய்யாததாலும் வெள்ளத்தின் போது கரை உடைப்பு ஏற்படாதவாறு கரைகளை அமைக்காததாலும் ஊருக்குள் வெள்ளப் பெருக் கெடுத்தது மட்டுமின்றி மழை நீர் வீணாக கடலில் கலந்து கொண்டிருக்கிறது. மழை நீரை சேமித்து வைக்கும் வகையில் குளங்கள் இல்லை. இந்த வெள்ளத்தின் போது பல சாலைகள், பாலங்கள் உடைந்து போய்விட்டன. அதில் ஒன்று மிகச் சமீபத்தில் கட்டப்பட்ட ஏரல், ஆத்தூர் பாலம். அந்தப் பாலம் கட்டுவதற்காக ஒப்பந்ததாரர்கள் கொடுக்கக் கூடிய கமிஷன் தொகை அதிகரித்து விட்டதால் பாலம் பலமின்றிப் போய்விட்டது என்று சொல்லப்படுகிறது.

தமிழக அரசு கேட்கும் 21000 கோடியை மத்திய அரசு வழங்க வேண்டும். தற்போது கொடுக்கப்படும் நிவாரணங்கள் தற்காலிகமானது. வீடுகளை, கடைகளை, விவசாயத்தை, உப்பளத்தை இழந்தவர் களுக்கு அரசு நிரந்தரத் தீர்வுக்கு வழி ஏற்படுத்த வேண்டும். ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டும். சூழலியலாளர்கள் எச்சரிக்கை செய்வதுபோல் புவி வெப்ப மயமாதலை குறைக்கவும் பசுமை வாயு வெளியேற்றத்தைக் குறைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். புதிய தொழிற்சாலைகள் சூரிய ஒளி போன்ற புதுப்பிக்கத் தக்க ஆற்றல் (Renewable energy) மூலம் இயங்க வேண்டும். சுற்றுப்புற சூழலை பாதிக்கும் தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டும் அல்லது கழிவு நீர் முறையாக வெளி யேற்றப்பட வேண்டும். குறிப்பாக ஸ்டெர்லைட் ஆலையை முற்றிலுமாக தூத்துக்குடியில் இருந்து அப்புறப்படுத்திட வேண்டும். தூத்துக்குடியின் விளை நிலங்களை நாசமாக்கிய ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் சந்தடி சாக்கில் மக்களுக்கு நிவாரண உதவிகள் கொடுத்து நல்லபெயர் எடுக்க முயற் சித்தது. மக்கள் அதை விரட்டியடித்தனர். அலை யாத்திக் காடுகள் காப்பாற்றப்பட வேண்டும். நீர் நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். ஆற்றங்கரைகள் பலமாக்கப்பட்டு அலைக்கற்கள் பதிக்கப்பட வேண்டும்.

**– மு.முருகன்**

## மோசடி நிதி நிறுவனத்திற்கு எதிராகப் போராட்டம்

பியர்ல்ஸ் அக்ரோடெக் கார்ப்பரேஷன் லிமிடெட் (பிஏசிஎல்) என்ற மோசடி நிதி நிறுவனம் நாடு முழுவதுமுள்ள 5 கோடிக்கு மேற்பட்டவர்களிடமிருந்து ரூ. 49,000 கோடி வரை வசூலித்துள்ளது. குறைந்த விலையில் வீட்டுமனை என்ற உத்திரவாதத்தின்படி (மோடி உத்திரவாதம் போல்) இந்தப் பெருந்தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. 2014ல் இந்த மோசடி வெளிச்சத்துக்கு வந்தது. உச்சநீதிமன்றம் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி லோதாவை சிறப்புக் கமிட்டியாக நியமித்து விசாரிக்க செய்தது. செபி அமைப்பு (அதானி 17 லட்சம் கோடி ரூபாய் ஊழல் பற்றி விசாரித்து வரும் அமைப்பு) முதலீட்டாளர்களுக்கு பணத்தைத் திருப்பித்தர உத்திரவிட்டது. ஆனாலும் பணம் திரும்பக் கிடைக்கவில்லை. பணத்தைத் திரும்பக் கேட்டு பணத்தைப் பறிகொடுத்தவர்கள் நாடு முழுவதும் போராடி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் பணத்தைப் பறிகொடுத்தவர்கள் பல லட்சம் பேர். கன்னியாகுமாரி உள்ளிட்ட மாவட்டங்களில் தொடர்ந்து போராடி வருகின்றனர். ஜனவரி 11 அன்று, விழுப்புரம் மாவட்டத்தில் இந்த நிறுவனத்திடம் ஏமாந்து போன ஏழை எளிய, சாமானிய மக்கள் நூற்றுக்கணக்கானவர்கள் திரண்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளனர்.

இடதுசாரி கட்சியிலிருந்து சமீபத்தில், இகக மாலெ வழிநடத்தும் அவிகிதொச, பெண்கள் கழகம், இளைஞர் கழகத்தில் இணைந்தவர்கள், கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர், டி.கலியமூர்த்தி, கடலூர் மாவட்டச் செயலாளர் சி. ராஜசங்கர் ஆலோசனையின் பேரில் இந்த மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது. சேகர், சுமதி, சத்யா, அன்பரசி, வல்லபநாதன், கந்தசாமி, ஆறுமுகம், ஏழுமலை, கண்ணன் உள்ளிட்ட அவிகிதொச, அஇமுபெக முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர். ❑

# போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டத்தை உதாசீனப்படுத்திய திமுக அரசு!

போக்குவரத்துத் தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நியாயமான கோரிக்கையை முன்வைத்து பல கட்ட போராட்டங்கள் நடத்தியும் அதிமுக, திமுக ஆட்சிகள் கண்டுகொள்ளாத நிலையில், கடந்த 2023 டிசம்பர் 19 அன்று ஆளுங்கட்சியின் தொமுச தவிர்த்து மற்ற அனைத்து சங்கங்களும் வேலை நிறுத்த அறிவிப்பு வழங்கின.

இதே கோரிக்கைகளுக்காக தொமுசவும் கடந்த காலங்களில் போராடி வந்திருந்தாலும், திமுக சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்து இருந்ததாலும் பிரச்சனைகள் பேசி தீர்க்கப்படும் என நம்பி இருந்த தொழிலாளர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அதனால் வேறு வழியின்றி 2024 ஜனவரி 9 முதல் வேலை நிறுத்தம் என அறிவித்தனர். அமைச்சர், அதிகாரிகளுடன் நடந்த பேச்சு வார்த்தையில் உடன்பாடு எட்டப்படவில்லை. அரசு தரப்பில் எந்த ஒரு கோரிக்கையையும் கூட ஏற்க தயார் இல்லை. கடந்த கால ஆட்சிகள் சொன்ன அதே 'நிதிநிலை சீரான பின் நிறைவேற்றப்படும்' என்ற பதிலே வந்தது. கடைசி கட்ட பேச்சு வார்த்தைகளில் போக்குவரத்துத் துறை அமைச்சர் கலந்து கொள்வதையும் தவிர்த்து விட்டார். நீதிமன்ற அவமதிப்பு உட்பட போக்குவரத்துத் துறை மீது தொழிற்சங்கங்கள் தொடுத்த பல்வேறு வழக்குகள் உயர்நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ளன. உயர்நீதிமன்றத்தில் வெற்றி பெற்ற வழக்குகள் அரசாங்கத்தால் மேல்முறையீடு செய்யப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் உள்ளன.

முதன்முறையாக போக்குவரத்து துறையின் ஊழியர்கள் சங்கங்களும் அதுபோல் பல்வேறு ஓய்வூதியர் சங்கங்களும் போராட்டத்தில் இணைந்திருந்தன. பிரச்சனை நீறுபூத்த நெருப்பாக இருந்து வந்த காரணத்தால் இது சாத்தியமாயிற்று. கோரிக்கைகளில் நியாயம் இருந்தும் வேலை நிறுத்தத்தில் ஒரு தரப்பு தொழிலாளர்களின் பங்களிப்பு இல்லாமல் போனதற்கு தொழிற்சங்கங்களின் அரசியல் பின்புலமும் காரணமாகும்.

ஜனவரி 10 அன்று பண்டிகை காலத்தில் பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லி நீதிமன்றம் கேட்டுக் கொண்டதை காரணம் காட்டி தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தை திரும்ப பெற்றன. 10ஆம் தேதி ஆங்காங்கு நடைபெற்ற மறியல் போராட்டத்திலும் போக்குவரத்து ஊழியர்களும் ஓய்வூதியதாரர்களும் திரளாக கலந்து கொண்டனர். மின்வாரிய ஊழியர் சங்கங்கள் ஆதரவு ஆர்ப்பாட்டம் பல பகுதிகளிலும் நடத்தினார்கள். திமுக அரசு காலம் தாழ்த்தி ஆயினும் 14வது ஊதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. தீபாவளிக்கு 20% போனஸ் வழங்கியது. மற்ற கோரிக்கைகள் படிப்படியாக தீர்க்கப்படும் என அறிவித்திருந்தது. தொழிற்சங்கங்கள் இறுதியாக பல்வேறு கோரிக்கைகளை சுருக்கி 6 அம்ச கோரிக்கைகள் என்று வந்து அதிலும் குறிப்பாக ஓய்வூதியதாரர்களுக்கான நிலுவை அகவிலைப்படி உயர்வை வழங்கினால் கூட வேலை நிறுத்தத்தை தவிர்க்கலாம் என அறிவித்திருந்தன. ஆனால், திமுக அரசு அதைக் கூட செய்யத் தயாராக இல்லாமல் பிடிவாதமாக நின்றதன் மூலம் தமிழக தொழிலாளர்களுக்கு கொடுத்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற தவறியுள்ளது. வெள்ள காலத்தில் சிறப்பாகப் பணியாற்றிய போக்குவரத்து தொழிலாளர்களை உதாசீனப்படுத்தியுள்ளது.

அதேபோல் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கான பழைய ஓய்வூதிய திட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் அரசியல் உறுதியும் திமுக அரசாங்கத்திடம் தென்படவில்லை.

ஒரு ட்ரில்லியன் பொருளாதாரம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்று உலக முதலீட்டாளர் மாநாட்டில் பேசிவிட்டு கேந்திரமான போக்குவரத்து துறை ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் நியாயமான கோரிக்கையை கூட ஏற்க மறுப்பது கடும் கண்டனத்திற்குரியது. திமுக அரசின் இந்த நிலைப்பாடு பாஜக எதிர்ப்பு, மதவெறி எதிர்ப்பு, சமூக சமத்துவத்திற்கான சக்திகளை ஒன்று திரட்டுவதில் பலவீனத்தையே ஏற்படுத்தும்.

தமிழக அரசு உடனடியாக போக்குவரத்துத் தொழிலாளர் கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும். 15வது ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையை துவங்க வேண்டும். ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவை அகவிலைப்படி உயர்வை வழங்க வேண்டும்.

முதலீட்டாளர்களை திருப்தி படுத்தினால் போதாது. உழைக்கும் மக்களின் நியாயமான கோரிக்கைகள் மீது கரிசனம் வேண்டும். அல்லது உழைக்கும் மக்களின் பெரும் கோபத்திற்கு ஆளாக வேண்டி இருக்கும். ❑

**– கே.ஜி.தேசிகன்**

# பில்கிஸ் பானோ வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஜனவரி 8ம் தேதிய தீர்ப்பு பற்றி....

இது பில்கிஸ் பானோவுக்கு மட்டுமின்றி நாட்டிலுள்ள பெண்கள் அனைவருக்குமான வெற்றியாகும். பெண்களுக்கு எதிரான சீண்டல்கள், பாலியல் வன்புணர்வுகள் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக கசப்பான வகையில் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் பெண்களுக்கு இந்தத் தீர்ப்பானது ஒரு நம்பிக்கையைக் கொண்டு வந்துள்ளது. பாலியல் முறைகேடுகள் மற்றும் பாலியல் வன்புணர்வுகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி என்பது முற்றிலும் கேலிக்கூத்தாக மாற்றப்பட்டுள்ள இந்தச் சமயத்தில் வந்துள்ள இந்தத் தீர்ப்பானது, பெண்கள் மீதான வெறுப்பு, வன்முறை மற்றும் வெறுப்பரசியல் ஆகியவற்றின் மீது ஒரு பலத்த அடியைக் கொடுத்துள்ளது. இருபது ஆண்டு கால நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் வந்துள்ள இந்த தீர்ப்பானது, தண்டனையில் இருந்து குற்றவாளிகளைத் தப்பச் செய்தவர்களுக்கு ஒரு சரியான பாடத்தைக் கற்றுக் கொடுத்துள்ளது. 'நன்னடத்தை' யின் பெயரில் 11 குற்றவாளிகளை தண்டனைக் காலத்திற்கு முன்னதாகவே விடுதலை செய்த குஜராத் அரசாங்கத்திற்கும் மோடி தலைமையிலான மத்திய அரசிற்கும் இது ஒரு சரியான அடிதான். அனைத்தையும் கடிவாளமிட்டு தங்கள் கட்டுக்குள் வைக்க முயற்சிக்கும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை மணியாகும். பெண்களுக்காக, பெண்களால் நடத்தப்பட்ட பெண்களின் கூட்டு முயற்சி என்று இந்த நாள் இந்நாட்டின் வரலாற்றின் பக்கங்களில் எழுதப்படும். பில்கிஸ் பானோவின் வலி மிகுந்த இப்போராட்டத்தில் இறுதி வெற்றி கிட்டும் வரை நாம் அவரோடு சேர்ந்து நிற்போம்.

**அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்** (AIPWA)
**தமிழ்நாடு**

பில்கிஸ் பானோ கும்பல் வன்புணர்வுக் குற்ற வழக்கில் தண்டிக்கப்பட்ட 11 குற்றவாளிகளும் முன்னதாகவே விடுதலை செய்யப்பட்டதை ரத்து செய்து உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ள இந்தத் தீர்ப்பானது, இதுவரை இல்லாத வகையில் மதவெறி வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதே மிகக் கடினம் என்றிருக்கும் இந்த நேரத்தில், வரவேற்கத் தக்கதாகும். 11 குற்றவாளிகளை விடுதலை செய்த பாஜக ஆளும் குஜராத் அரசின் வெட்கக் கேடான முடிவை இந்தத் தீர்ப்பு திருத்திவிட்டுள்ளது. கும்பல் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் 11 பேரை விடுதலை செய்தது என்பது பாஜக கூறும் 'மகள்களைப் பாதுகாப்போம்' என்பது என்ன லட்சணத்தில் உள்ளது என்பதைக் காட்டிவிட்டது. 2002ல் நரேந்திர மோடி முதல்வராக இருந்தபோது இஸ்லாமியர்களுக்கு எதிரான இந்த நிகழ்ச்சி நிரல் குஜராத்தில் அரங்கேற்றப்பட்டது. நரேந்திர மோடி பிரதமாக இருக்கும்போது, கும்பல் கொலைகளும் மதவெறி வன்முறைகளும் சர்வ சாதாரணமாகிவிட்டன. மதச்சார்பின்மையைப் பாதுகாப்பதற்காக மனஉறுதியுடன் போராடுபவர்களுக்கு ஊக்கமளிக்கும் இந்தத் தீர்ப்பு.

**சுசேதா டே, மத்தியக்குழு உறுப்பினர்**
**இகக(மாலெ)விடுதலை**

போராட வேண்டும் என பில்கிஸ் பானோ எடுத்த முடிவானது முற்போக்கு வழக்கறிஞர்கள் குழுவிற்கு மிகப் பெரிய பலத்தைக் கொடுத்தது. இறுதியில் நீதி கிடைத்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு குரலற்ற குடிமக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நமது நீதித் துறையின் மீதான நம்பிக்கை மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பின் மூலம் குஜராத் அரசு ஆட்சியில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

**ரதி ராவ், தேசியத் தலைவர்**
**அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்**

பில்கிஸ் பானோவிற்கு வணக்கம்! இந்த வழக்கினை நீதிமன்றத்தில் நடத்திய வழக்கறிஞர்களுக்குப் பாராட்டுகள். பில்கிஸின் உணர்வு கோடிக்கணக்கான பெண்களுக்கு தைரியத்தைக் கொடுத்துள்ளது. வன்புணர்வு மற்றும் பாலியல் குற்றவாளிகளுக்கும் இன்று ஒன்றிய அரசு வெளிப்படையாகவே பாதுகாப்பு அளிக்கும்போது, பெண்களை ஒருமுகப்படுத்தி, மனுஸ்மிருதியின் அடிப்படையில் ஆள்வதற்கு முயற்சிக்கும் போது, உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பானது, சாவித்ரிபாய் பூலே மற்றும் பாத்திமா சேக் வழியில் நீதிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடுகின்ற பெண்களுக்கு நம்பிக்கை ஒளிக் கீற்றைக் காட்டியுள்ளது.

**மீனா திவாரி, தேசியப் பொதுச் செயலாளர்**
**அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.01.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023







Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh